கோகுலம்

குழந்தைகள் மாதமிருமுறை
15-5-1972
30 காசு





ரெக்ஸ் பற்றிய மிகவும் திருப்தியளிக்கும் இரண்டு அம்சங்கள்.


ஒன்று, இதன் உன்னத தரம் — இப்போது, இதன் விலைநயம்.

ஒவ்வொருவர் சுவைக்கும் ஏற்ற ஸ்க்வாஷ்கள் மற்றும் ஸிரப்களின் வகைகள்.

ரெக்ஸ் ஸ்க்வாஷ்கள் மற்றும் ஸிரப்கள்— அதாவது, இனிமையான, இன்சுவையுள்ள, சாறு செறிந்த பழங்களிலிருந்து தயாரிக்கப்பட்ட உன்னத பானங்கள் இவை. கவனமுடன் தேர்ந்தெடுத்த நேர்த்தியான பழங்களுடன் தூய கருப்பஞ் சாற்றுப் பாகும், விசேஷமான இதர சரக்குகளும் சேர்த்துத் தயாரிக்கப்படுகின்றன. சுவைத்தறியாத புத்துணர்ச்சி தரும் பானங்கள் இவை. இப்போது ரெக்ஸ் பானங்கள் சகாய விலையில் கிடைக்கின்றன. ரெக்ஸ் பானங்களைவிட அதிக திருப்தியளிக்கும் பானங்கள் வேறென்ன இருக்க முடியும்?

- ஆரஞ்சு ஸ்க்வாஷ்
- ஆரஞ்சு கிரஷ்
- லெமன் ஸ்க்வாஷ்
- லெமன் பார்லி
- லைம் ஜூஸ் கார்டியல்
- மாங்கோ ஸ்க்வாஷ்
- கோலா கான்ஸன்ட்ரேட் ஃப்ரூட் ஸிரப்
- ராஸ்பெர்ரி ஸிரப்
- ஸ்ட்ராபெர்ரி ஸிரப்
- பைனாப்பிள் ஸிரப்
- ரோஸ் ஸிரப்

கார்ன் ப்ராடக்ட்ஸ் கம்பெனி
(இந்தியா) பிரை. லிட். பம்பாய்-1.



கோகுலம்

பரிதாபி, வைகாசி 2

மே 15, 1972

மலர் 1 இதழ் 3



சந்தா விவரம் :


தனிப் பிரதி விலை 30 காசு
ஒரு வருடம் ரூ. 7-00
ஆறு மாதம் ரூ. 3-50
இலங்கை ரூ. 9-00 (இலங்கை நாணயப்படி)
இதர நாடுகள் ரூ. 18-00

(சந்தாத் தொகையை மணியார்டர் அல்லது சென்னையில் மாற்றக்கூடிய டிமாண்ட் டிராப்ட் மூலம் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். சந்தாவைச் செக் மூலம் அனுப்புவதைத் தவிர்க்கவும்.)

அட்டைப்பட முதலை :

நானும் 'போட்'டிலே
ஏறிக்கட்டுமா?

வண்ணப்படம் :
ஆர். பி. எஸ். மணி



உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மையென்று
தானறிதல் வேண்டும்

- பாரதியார்

நீங்கள் எந்த வேலை செய்தாலும், பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் அதை நல்ல முறையில் செய்ய உதவுகிறது.



உங்கள் படிப்பறையில் படிக்கும்போது பிலிப்ஸ் உங்கள் கண்களைப் பாதுகாக்கிறது.



உங்கள் குளியலறையில், நல்ல முறையில் ஷவரம் செய்து கொள்ள பிலிப்ஸ் உதவுகிறது.


பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் 100 வாட் பல்பினைப் போல் இரு மடங்கு ஒளி தருகிறது. இந்த ஒளி சிறந்ததும், பிரகாசமானதும், கூசாததுமானது. கண்களுக்குக் குளிர்ச்சி தருகிறது. இருந்தும், மின்சாரச் செலவு ஒரு 40 வாட் பல்புக்காகும் அளவேதான்.

இந்தக் கச்சிதமான பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் இணைப்பு ஒரு பிலிப்ஸ் 40 வாட் ஃப்ளூரொஸெண்ட் பல்ப் கொண்டது. அது சிறந்த, அதிகப் பிரகாசமான ஒளியைத் தருகிறது.

பிரபலமான பிலிப்ஸ் பாலிஸ்டர் பலாஸ்ட், ஸ்டார்ட்டர், ஸ்டார்ட்டர் ஹோல்டர் மற்றும் ஸ்பிரிங் இணைந்த ரோடார் லாம்ப் ஹோல்டர், இவைகளைக் கொண்டது பிலிப்ஸ் ஸ்ட்ரிப் லைட். பொருத்துவதற்கு எளிதானது.

உபயோகத்திற்குச் சிக்கனமானது. குறைந்த சிரமத்தில் நம் வேலைகளை முடிக்க உதவுகிறது.

இன்றே பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் பொருத்துங்கள் — உங்கள் வீடு, ஆபீஸ், கடை மற்றும் தொழிற்சாலையில்.



உங்கள் சமையலறையில், நல்ல முறையில் சமையல் செய்ய பிலிப்ஸ் உதவுகிறது.



பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட்

மூலம் அரைப்பங்கு செலவில் இரு பங்கு வெளிச்சம் பெறுங்கள்.

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

PHL.3558



ஆத்திசூடி

ஊக்கமது கைவிடேல்

காரியம் செய்யும்போது தடைகள் வந்தாலும் மனச் சோர்வு அடையக் கூடாது. மன எழுச்சியுடன் முயற்சி செய்ய வேண்டும்.

ஊக்கம் : மனவெழுச்சியை - **கைவிடேல் :** விடாதே.

காரியம் செய்து முடிப்பேன் என்கிற தைரியத்துக்கு மனவெழுச்சி அல்லது ஊக்கம் என்று பெயர். ஊக்கமே பெருஞ் செல்வம்.

எண்ணெழுத் திகழேல்

எண் எழுத்து: கல்வியை - **இகழேல் :** இகழாதே.

செல்வம் இருக்கிறதென்று தைரியம் கொண்டு கல்வி வேண்டியதில்லை என்று எண்ணி, எண்ணும் எழுத்தும் நன்றாகக் கற்காமல் இருக்க வேண்டாம்.

எண் : கணக்கு - **எழுத்து :** இலக்கண இலக்கியம்.

கல்வி என்பதற்குப் பதில் எல்லாக் கல்விக்கும் அடிப்படைகளான எண், எழுத்து என்ற இரண்டை எடுத்துக் குழந்தைகளுக்குச் சொல்லப்பட்டது.

பிறரிடத்தில் காணும் கல்வியைக் கௌரவிப்பாயாக.

ஏற்பது இகழ்ச்சி

எத்தொழிலாவது செய்து பிழைப்பது நல்லது.

ஏற்பது : மற்றவரிடம் வாழ்வுக்கு வேண்டியதை யாசித்துப் பெறுவது - **இகழ்ச்சி :** இழிவான பிழைப்பாகும்.


பிறருக்குத் துன்பம் உண்டாக்கும் தொழில் கூடாது. மற்ற எத்தொழிலும் யாசகம் செய்து பிழைப்பதைக் காட்டிலும் நல்லது. உடல் வன்மை இருக்கும் வரையில் பிச்சை எடுத்து வாழக்கூடாது.

ஐயமிட்டுண்

இரப்போர்க்குப் பிச்சை கொடுத்த பின்தான் உண்ண வேண்டும்.

ஐயம் : பிச்சை - **இடு :** கொடு.

இரப்பது இழிவு என்று முன்னே சொல்லப்பட்டது. ஆனால் குருடர், முடவர் முதலிய அநாதைகள் கேட்பது நியாயம், அவர்களுக்குக் கொடுக்க வேண்டியது கடமை. தவிர பிறனுடைய தருமத்தை அவனவன் காப்பாற்றிக் கொள்ள வேண்டியது. அவன் பிச்சை எடுத்துப் பிழைப்பது அவனுக்கு நல்லதல்ல. ஆனால் பசியுடன் அல்லது வேறு கஷ்டத்துடன் வந்தவனுக்கு உதவுவது உன்னுடைய கடமை.





தேவகி திருமணம்

வட மதுரையை உக்கிர சேனன் என்ற மன்னன் அரசு புரிந்தான். இவனுடைய மகன் கம்சன். உக்கிர சேனனுடைய தம்பி தேவகன்; தேவகன் புதல்வி தேவகி.

உக்கிரசேன மன்னன், யதுகுல திலகனான சூரசேனனுடைய புதல்வர் வசுதேவருக்குத் தன் தம்பி மகள் தேவகியைத் திருமணம் செய்து வைத்தான்.

மங்கல வாத்தியங்கள் முழங்கின. வேதியர்கள் வேத மந்திரங்களைக் கூறினார்கள். சுற்றத்தவரும் நண்பர்களும் கூடி மகிழ்ந்தார்கள். மிகுந்த கோலாகலமாகத் திருமண விழா நடைபெற்றது.

திருமணம் முடிந்தபின் மணமக்கள் புறப்பட்டார்கள். கம்சன் தன் சிறிய பிதாவின் புதல்வியும் தன் தங்கையுமாகிய *ஃதேவகியிடம் அதிக அன்பு வைத்திருந்தான்.

அதனால் தங்கையும் மைத்துனனும் ஆரோகணித்து அலங்கரித்த தேரைத் தானே சாரதியாக அமர்ந்து செலுத்தினான். அரச வீதியில் அணிமணித் தேர் சென்று கொண்டிருந்தது.

இடிமுழக்கம் போல் எல்லாரும் கேட்க வானில் ஒரு வசனம் எழுந்தது.

"கம்சனே! எவள் மீது அளவற்ற அன்பு வைத்திருக்கின்றாயோ அந்தத் தேவகி வயிற்றில் பிறக்கும் எட்டாவது புதல்வனால் உனக்கு மரணம் உண்டாகும்."

இதனைக் கேட்டுக் கம்சன் நடுங்கினான். சீற்றத்தால் கொதிப்புற்றான். அசுர குணமுடைய அவன், "ஆ! இவள் மகனால் எனக்கு மரணமா?" என்று சினங் கொண்டான்.

தங்கையின் கூந்தலைப் பிடித்து மண்ணில் தள்ளினான். காலால் மிதித்தான். அவளை வெட்டுவதற்கு வாளை எடுத்து ஓங்கினான்.

"அண்ணா! அண்ணா! நான் என்ன செய்தேன்? என்னைக் கொல்வது நியாயமா?" என்று தேவகி அலறி அழுதாள்.

வசுதேவர் கம்சனை வணங்கி அவன் கரத்தைப் பிடித்துத் தடுத்து, "மைத்துனரே! பெண் கொலை பெரும் பாவம். இவளைக் கொல்வது முறையன்று. இவள் வயிற்றில் இனிப் பிறக்கும் பிள்ளை தானே உன்னைக் கொல்லப் போகின்றது? குழந்தைகள் பிறந்தவுடன் உன்னிடம் ஒப்புவிப்பேன். இவளை மன்னித்து உயிர்ப் பிச்சை கொடு. மணமகளைப் பிணமகளாகச் செய்யாதே" என்று இன்னுரை கூறி வேண்டிக் கொண்டார்.

கம்சன் சீற்றம் தணிந்தான். இப்படி அது கலாட்டாக் கல்யாணமாக மாறியது. பிறகு வேறு ஒரு சாரதி தேர் ஓட்டினான்.

உக்கிரசேனன் தேவகிக்குப் பொற் பாத்திரங்கள், பொன் மாலை பூண்ட பசுக்கள், ஆடைகள், அணிகலன்கள் முதலிய சீதனங்கள் வழங்கினான்.

---

* கம்சனுக்கு நேர்த் தங்கை தேவகியன்று. உக்கிரசேனன் மகன் கம்சன்.


தேவகன் மகள் தேவகி. கிருஷ்ணர் ரோகிணியில் பிறந்தார். கம்சனை வதைத்தார். ஆதலால் ரோகிணியில் பிறந்தால் தாய்மாமனுக்கு ஆகாது என்ற கொள்கை பொருந்தாது.

இரக்கமற்ற அரக்கன்

வசுதேவரும் தேவகியும் கம்சனுக்கு அஞ்சி வாழ்ந்தார்கள். வசுதேவர் தமது மூத்த மனைவி உரோகணியைத் தன் அரிய நண்பன் நந்தகோபனிடம் அடைக்கலமாக விட்டிருந்தார்.

கம்சன் மிகுந்த கொடுமை உடையவனாய்த் திரிந்தான். புலியினிடம் ஆடுகள் அவதிப்படுவது போல் மக்கள் கம்சனால் அவதி அடைந்தார்கள்.

தேவகி கருவுற்று அழகிய புதல்வனைப் பெற்றாள். சொல் தவறாமல் வசுதேவர் குழந்தையைக் கொண்டு போய்க் கம்சனிடம் கொடுத்தார்.



குழந்தையின் எழில் நலத்தைக் கண்டு கம்சன் இரக்கங் கொண்டான். "என்னைக் கொல்வது எட்டாவது மகன்தானே? இது அல்லவே! வீணே இக்குழந்தையை ஏன் கொல்ல வேண்டும்? இதை நீங்களே கொண்டு போகலாம்" என்றான்.

குழந்தையின் அழகு இரக்கமில்லாத அரக்க உள்ளத்தையும் இளக வைக்கும்.

பின்னர் தேவகிக்கு முறையே ஐந்து புதல்வர்கள் பிறந்தார்கள். கம்சன் அவர்களையும் கொல்லாது விடுத்தான்.

சரவணப் பொய்கையில் விளையாடிய ஆறு சிறுவர்களைப் போல் வசுதேவருடைய ஆறு சிறார்களும் விளையாடி வளர்ந்தார்கள்.

பகவானுடைய கட்டளையால் தேவர்களும், தேவ மாதர்களும் யாதவ குலத்தின் கிளைகளாகிய விருஷ்ணிகள், போஜர்கள், அந்தகர்கள், தாசர்கள், சாத்வதான் என்று ஐந்து தலங்களிலும் பிறந்து வாழ்ந்தார்கள்.

நாரத முனிவர் கம்சனிடம் வந்து, "கம்ச மகாமன்னனே! அன்று அசரீரி கூறிய சொற்களை மறந்து விட்டனையா? உன் தங்கை மக்கள் வளர்பிறை மதிபோல் வளர்கின்றார்களே?" என்று கேட்டார்.

"தேவ ரிஷியே! என்னைக் கொல்வது எட்டாவது குழந்தைதானே?"

"கம்ச வேந்தனே! முதலில் இருந்து எண்ணினால் கடைசிக் குழந்தை எட்டாவது. கடைசியிலிருந்து எண்ணினால் முதற் குழந்தை எட்டாவது. கோடி வீடு என்று கூறினால் இரண்டு கோடி வீடுகள் இருக்குமல்லவா? இது கொல்லுமோ? அதுவே கொல்லுமோ? யார் கண்டார்கள்?" என்றார்.

இதைக் கேட்ட கம்சன் காலனைப் போல் சிறு ஆறு குழந்தைகளையும் வெள்ளரிப் பிஞ்சுகளை வெட்டுவதைப் போல் வெட்டி எறிந்தான். (தொடரும்)

தெரியுமா?

12. இறக்கை இல்லாத பறவை எந்த நாட்டைச் சேர்ந்தது?

13. கீழ்க் கண்டவைகள் எங்கே இருக்கின்றன? 1. க்ரெம்ளின், 2. சுதந்திரச் சிலை, 3. ஸ்டோன் ஹெஞ்ச், 4. அக்ரோபாலிஸ், 5. கலோசம்.

14. நக்ருமா எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

15. ஆசியாவின் மிக நீளமான நதி எது?

16. சீனாவின் பிரதமர் யார்?

17. ஆசியாவின் மிகப் பெரிய நகரம் எது?

18. ஈரான் நாட்டுக்கு வேறொரு பிரபலமான பெயர் உண்டு. அது என்ன?

19. காங்கோவின் தலைநகர் எது?

20. ஐக்கிய அரபுக் குடியரசின் ஜனாதிபதி யார்?

21. ஆப்பிரிக்காவின் மிகப் பெரிய நகரம் எது?

22. கிம்பர்லி என்ற பெயர் உங்களுக்கு எதை நினைவுபடுத்துகிறது?

23. கண்ணீர் விட்டு அழும் அதிசயச் சுவர் எங்கிருக்கிறது?

24. பாரதத்தைத் தவிர வேறு ஒரு நாட்டில் ஒரு நதி ஒரு காலத்தில் கடவுளாக வணங்கப்பட்டது. அது எந்த நதி?

25. தங்கக் கதவு என்ற பெயர் எந்த நகரத்தோடு தொடர்புடையது?

26. வெனிஸுவேலாவின் தலைநகரம் எது?

27. நியூ ஆர்லியன்ஸ் நகரம் ஐக்கிய அமெரிக்காவில் எந்த மாகாணத்தில் உள்ளது?

28. கடற்படையின் மிக உயர்ந்த பதவி எது?

29. 'ஜாக் ஹாப்ஸ் (Jack Hobbs)' இந்தப் பெயர் ஒரு பிரபலமான விளையாட்டுடன் தொடர்புடையது. அது எந்த விளையாட்டு?

30. லினன் துணி எந்தத் தாவரத்திலிருந்து தயாரிக்கப்படுகிறது?

> சென்ற இதழ் கோகுலம் 'உங்களுக்குத் தெரியுமா?' என்ற பகுதியில் எங்களுக்குத் தெரியாமல் ஒரு தவறு. 11ம் கேள்விக்கு, இந்த இதழில் வந்துள்ள 12ம் கேள்வியின் விடை தவறுதலாக அச்சாகிவிட்டது. தென் ஆஸ்திரேலியாவின் தலைநகர் அடிலெய்டுதான், நியூஸிலாந்தல்ல! தவறைக் குறிப்பிட்டு ஏராளமான குழந்தைகள் எழுதியிருக்கிறார்கள். நன்றி. இனி இம்மாதிரித் தவறு ஏற்படாது பார்த்துக் கொள்கிறோம். - ஆசிரியர்

31. ஓப்பியம் என்ற மயக்க (போதை) மருந்து ஏதோ ஒரு செடியின் பூவிலிருந்து தயாரிக்கப்படுகிறது. அந்தப் பூவின் பெயர் என்ன?

32. அட்லாண்டிக் கடலையும் பசிபிக் கடலையும் இணைக்கும் கால்வாய் எது?

33. நியூஸிலாந்து நாட்டின் பழங்குடி மக்கள் எப்படி அழைக்கப்படுகிறார்கள்?

34. 'ஹெயில் ஸெலாஸி' இந்தப் பெயரைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இல்லாவிட்டால் அண்ணாவிடமோ, அப்பாவிடமோ கேளுங்கள்: இந்தப் பெயர் எந்த நாட்டுடன் தொடர்புடையதென்று.

35. எந்த உலோகம் மிகக் குறைந்த உஷ்ணத்திலும் உருகக் கூடியது?

36. நம் உடலில் பித்த நீரை உற்பத்தி செய்யும் உறுப்புக்குப் பெயர் என்ன?

37. இருதயத்துக்கு ரத்தத்தை எடுத்துச் செல்லும் உறுப்பு எது?

38. 'ரத்தக் குழல்களின் மூலம் ரத்த ஓட்டத்தை நடத்தும் உறுப்பு எது?

39. மனிதனின் உடலில் உள்ள எலும்புகள் எத்தனை?

40. பறக்கும் ஓநாய் — பார்த்ததுண்டா? உண்மையா?

விடைகள் :

12. நியூஸிலாந்து
13. 1. மாஸ்கோ, 2. நியூயார்க், 3. சாலிஸ்பெரி சமவெளி - வில்ட்ஷயர் - இங்கிலாந்து. 4. ஏதென்ஸ், 5. ரோம்
14. கானா
15. யாங்ட்ஸி
16. சூ - யென் - லாய்
17. டோக்கியோ
18. பாரசீகம்
19. லியோபோல்ட் வில்லி
20. நாசர்
21. கெய்ரோ
22. வைரச் சுரங்கங்களை
23. ஜெருசலத்தில்
24. நைல் நதி - எகிப்தில்
25. சான்பிரான்ஸிஸ்கோவுடன் (Golden Gate)
26. காரகாஸ்
27. லூசியானா
28. அட்மிரல் ஆஃப் தி ஃப்ளீட்
29. கிரிக்கெட்
30. பிளாக்ஸ்
31. பாப்பி
32. பனாமா
33. மோரிஸ்
34. எதியோப்பியா
35. ஈயம்
36. கல்லீரல்.
37. வீன் (ரத்தக் குழல்)
38. இதயம்
39. 208
40. கிடையாது. ஓநாய் முக முடைய ஒரு வகை வௌவால் இது.

ஓடாமல் விளையாடு பாப்பா!

மழை கொட்டுக் கொட்டென்று கொட்டுகிறது. வெளியே எங்கும் விளையாடப் போக முடியவில்லை. வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடக்கும் உங்களுக்குப் பொழுது போகவில்லை. என்ன செய்யலாம்? இதோ, இந்த விளையாட்டை விளையாடலாம்: 'இந்தப் பக்கத்தில் ஒன்று முதல் ஏழு வரை இலக்கமிட்டுள்ள அமைப்புக்கள் இருக்கின்றன இல்லையா? ஓர் அட்டையில் இவைகளை 'டிரேஸ்' செய்து கொள்ளுங்கள். பிறகு அதைத் துண்டு துண்டாகக் கத்திரித்துக் கொள்ளுங்கள். இந்த அட்டைத் துண்டுகளின் இரு பக்கங்களிலும் 'இந்தியன் இங்க்'கையோ, அல்லது வேறு அழுத்தமான ('டார்க்') வண்ணங்களையோ பூசுங்கள்.

இனிமேல்தான் சுவாரசியமான கட்டம். இந்த ஏழு துண்டுகளையும் கொண்டு மேஜை மீது அருகே காட்டியுள்ளது போன்று மிருகங்களின் உருவங்களை அமைக்க வேண்டும். இங்கே ஐந்து பிராணிகளை உருவாக்கிக் காட்டி இருக்கிறது. அவை என்ன என்ன என்று தெரிகிறதா? ஒவ்வொரு பிராணியை உருவாக்கவும் ஏழு துண்டுகளையும் பயன்படுத்த வேண்டும். முயன்று பாருங்கள். இங்கு கொடுக்காத வேறு சில மிருகங்களின் நிழலுருவையும் இந்தத் துண்டுகளைக் கொண்டு உருவாக்க, உங்கள் கற்பனை சக்தியையும் திறமையையும் பயன்படுத்திப் பாருங்கள். இங்கு காட்டியுள்ளதைப் போலவேகூட உங்களால் அமைக்க முடியா விட்டால் 8-ம் பக்கத்தில் அதற்கு வழி சொல்லப்பட்டிருக்கிறது.

1

2

3

4

5

6

7

□ எத்தனை அழகான பறவை, இதற்கு எத்தனை நீளமான தாடி? ஆமாம். தாடிதான். அலகின் இரு பக்கங்களிலும் அலகுக்கு மேலேயும் ஆக மூன்று தசைக் கயிறுகள் (வாட்டில்ஸ்) வளர்ந்திருக்கும். இது ஒரு விசித்திரமான பறவைதானே? இதற்கு மணிப் பறவை என்று பெயர். அமேசான் காடுகளில் வாழ்கிறது இந்த மூன்று தாடிப் பறவை. இது கத்தும் போது மணி அடிக்கும் ஓசை உண்டாகும்என்று கருதப்பட்டது தவறு என்பது பின்னால் உறுதி செய்யப் பட்டாலும் இதற்கு மணிப்பறவை என்ற பெயர் மட்டும் நிலைத்துவிட்டது.

மணியின் ஓசை எழுப்பும் ஒரு பறவை பிரேஸில் நாட்டில் வாழுகிறது. தாடிப் பறவையின் ஓசை வாத்தைப்போல், நாய் குரைப்பதைப் போல்தான் இருக்குமாம். இதன் தாடிகளால் இதற்கு எவ்வித உபயோகமும் கிடையாது. தன் ஜோடியோடு சேர்ந்து மகிழும் போது இந்தத் தாடிகள் இரண்டு அங்குலம் வரை அதிகமாக நீள்கிறது. பெண் தன் தலையை அசைத்துப் பின்னலைப் பின்னால் தள்ளிக் கொள்ளுவது போல், இவ்வினத்தின் ஆண் பறவை தன் அலகின் மேல் உள்ள தசைக் கயிற்றைத் தலையை ஆட்டிப் பின்னால் தள்ளிக் கொள்ளுவது தமாஷாக இருக்கும். இதன் கழுத்தும் தலையும் வெண்மையாகவும் உடல் பழுத்த சிவப்பாகவும் இருக்கும்.




என்னா விநோதம் பாரு!




□ தேளைப் பார்த்திருப்பீர்கள். ஆனால் தேள் ஈயைப் பார்த்திருக்கிறீர்களா? மேலே படத்தில் இருப்பதுதான் அது. இதைப் பார்த்ததும் இதற்குத் தேள் ஈ என்ற பெயர் ரொம்பப் பொருத்தம் என்று தோன்றுகிறதல்லவா? தேளைப் போலவே இதுவும் தன் கொடுக்கினால் கொட்டும் என்று முடிவுக்கு வந்து விடாதீர்கள். பார்வைக்குத்தான் தேளைப் போல. மற்றபடி இதன் கொடுக்கில் விஷமும் கிடையாது, இது கொட்டவும் கொட்டாது. இதில் ஆறு வகையுள்ளன. ஆஸ்திரேலியா, ஐரோப்பா, வட அமெரிக்கா ஆகிய நாடுகளில் இந்தத் தேள் ஈ காணப்படுகிறது. இதன் தலையில் முன்னால் உறுதியான அலகு போன்ற மூக்கு இருக்கிறது. தேளைப் போலவே வாலைத் தூக்கிக் கொண்டு நடக்கும்.

ஓடாமல் விளையாடு பாப்பா : விடை



கண்ணன் கையில் கண்டது என்ன?





கோகுலத்துக் கண்ணன் அதோ
தெருவில் வருகிறான்.
குறும்புச் சிரிப்புச் சிரித்துக் கொண்டே
அருகில் வருகிறான்.

மேக வண்ணக் கண்ணன் அதோ
தெருவில் வருகிறான்.
மெல்ல மெல்ல நடந்து நடந்து
அருகில் வருகிறான்.

கையைப் பின்னால் மறைத்துக் கொண்டே
கண்ணன் வருகிறான்.
கள்ளச் சிரிப்புச் சிரித்துக் கொண்டே
கண்ணன் வருகிறான்.

பையப் பைய நடந்து நடந்து
கண்ணன் வருகிறான்.
பார்த்துக் கண்ணைச் சிமிட்டிக் கொண்டே
கண்ணன் வருகிறான்.

கண்ணன் எதையோ பின்புறம்
கையில் வைத்து இருக்கிறான்.
என்ன வாக இருக்குமோ ?
எட்டிப் பார்த்தேன் ஆவலாய்.

எட்டி எட்டிப் பார்த்துமே
எனக்குத் தெரிய வில்லையே !
சுற்றி வந்தேன். கண்ணனும்
சுற்றிச் சுற்றி ஏய்த்தனன் !

மாயக் காரன் கைகளை
மறைத்து மறைத்து வைத்ததால்,
ஓய்ந்து போனேன். கடைசியில்,
உயரே கையைத் தூக்கினான்.

கண்ணன் கையில் இருந்ததைக்
கண்டவுடனே நானுமே
கொண்டேன் மிகவும் இன்பமே.
குதிக்க லானேன் மகிழ்ச்சியில்.

கண்ணன் கையில் இருந்தது
என்ன என்று தெரியுமா ?
வெண்ணெய் இல்லை, குழல் இல்லை.
வேறே என்ன இருந்தது ?

வண்ணப் படங்கள் கொண்டது,
மகிழ்ச்சி மிகவும் தருவது,
கண்ணைக் கவரும் 'கோகுலம்'
கண்டேன்! கண்டேன்!! கண்டேனே!!.

அழ.வள்ளியப்பா



புகைப்படங்கள் :
என். ராமகிருஷ்ண






இவை என்ன ?

☐ தவளை வாய்ப் பறவை — கேள்விப்பட்டிருக்க மாட்டீர்கள். இரவில் இரை தேடும் இனத்தைச் சேர்ந்தது இப்பறவை. பெரிய அகன்ற வாய் இதற்கு இப்பெயரை வாங்கிக் கொடுத்திருக்கிறது. அது மட்டுமல்ல. பார்வைக்கு ஆந்தையின் தோற்றமும் இதற்கு உண்டு. ஆஸ்திரேலியாவிலிருந்து இந்தியா வரை இப்பறவைகளைக் காணலாம். இதன் இறகுகளில் உள்ள புள்ளிகள், இவை இருக்குமிடத்தைப் பிறர் கலபமாகத் தெரிந்து கொள்ள முடியாத படிக்குத் தடுக்கும் சாதனமாக இருக்கின்றன. பகலில் தூங்கி வழியும்; இரவில் வெகு சுறுசுறுப்பாக உணவு தேடும்.

☐ கடற்கரைகளில் இத்தகைய மீன்களைப் பார்க்கலாம். இதற்கு 'ஸ்டார் ஃபிஷ்' என்று பெயர். ஒளிக்கற்றை போன்ற கைகளின் எண்ணிக்கை மீனுக்கு மீன் மாறுபடும். ஐந்திலிருந்து பன்னிரண்டு வரை கைகள் இருக்கும். அதே போல் இதன் நிறமும் பல வகைப்படும்-சிவப்பு, ஊதா கலந்த சிவப்பிலிருந்து மஞ்சள் வரை. இம்மீனின் வாய்ப்பாகம் இதன் நடுப் பக்கத்தின் அடிப் பாகத்தில் உள்ளது. மலரின் இதழ்களைப் போலத் தோன்றும் இதன் கைகள் ஸ்பரிசக் கருவிகள் அல்ல. இக்கைகளின் அடிப்பாகத்தில் வரிசையாக உறுஞ்சு கருவிகள் உள்ளன. இதனால் இது மிக மெதுவாக நகர முடியும். இவை சிப்பிகளின் விரோதிகள். இதைக் கண்டதுண்டமாக வெட்டினாலும் ஒவ்வொரு துண்டும் ஒவ்வொரு புதிய 'ஸ்டார் ஃபிஷ்' ஆக உருவாகிவிடும்.





☐ இந்தப் பையன் பந்தைக் கையிலெடுத்துக் கொண்டு ஓடுகிறானே எதற்காக? ''கோல்'' போடுவதற்கு. இப்படியும் ஒரு விளையாட்டா? ஆமாம். இதற்கு 'ரக்பி பந்தாட்டம்' என்று பெயர் 'ரக்பி என்பது ஒரு பள்ளிக்கூடத்தின் பெயர். இந்தப் பள்ளியைச் சேர்ந்த வில்லியம் வெப் எல்லிஸ் என்ற பையன் 1823ம் ஆண்டு ஃபுட்பால் ஆட்டத்தில் இப்படிப் பந்தைக் கையில் தூக்கிக் கொண்டு கோலை நோக்கி ஓடினான். இது உதை பந்தாட்ட விதிகளுக்கு முரணானது. வயது வந்த பார்வையாளரிடையே இச்சம்பவம் சிந்தனையைக் கிளறி விட்டது. புதிய உதை பந்தாட்டத்துக்கு அப்போதே வித்து விழுந்தது.

☐ ஜனவரி—ஆங்கில வருஷத்தின் முதல் மாதம். யாருடைய நினைவாக இது வைக்கப்பட்டிருக்கிறது தெரியுமா? ரோமானியர்களின் புராண புருஷரான ஜேனஸ் என்ற கடவுளின் நினைவாக. இவருக்கு இரண்டு முகங்கள். எந்தச் செயலின் தொடக்கத்துடனும் இவர் பிணைக்கப்பட்டிருப்பார். ஆரம்பத்தின் அதிபதி. ஆகவே, ஆண்டின் தொடக்க மாதம் இவர் பெயரால் வருகிறது. கோட்டைக் கதவுகள், நுழை வாயில்கள் ஆகியவற்றுக்கும் கடவுள் ஜேனஸ் தான். யுத்தத்தின் பாதுகாவலர். ஆகவே சமாதான நாட்களில் ஜேனஸ் ஆலயக் கதவுகள் மூடப்பட்டிருக்கும். யுத்த காலத்தில் மட்டும் இக்கோயிலின் கதவுகள் திறக்கப்படும்.





வணங்காதவன்

— ரேவதி —



ஹைதர் அலி கவலையோடு காணப்பட்டான்.

ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்துக்கு எதிராகத் தமிழ் நாட்டிலிருந்து வீர பாண்டியக் கட்டபொம்மன் போர்க் கொடி உயர்த்தினான் என்ற வரலாறு உங்களுக்கெல்லாம் தெரியும். கட்டபொம்மனைப் போல் ஆங்கிலேயர்களை இந்த நாட்டிலிருந்தே விரட்ட முயன்றவன்தான் மைசூர் மன்னன் ஹைதர் அலி.

ஹைதர் மாவீரன். அவனுடைய பெயரைக் கேட்டாலே அழுத பிள்ளை வாய் மூடும். ஆங்கிலேயர்களுக்கு அவனுடைய பெயரைக் கேட்டாலே குலை நடுக்கம்தான்! இஸ்லாமியனாக இருந்தும் அக்பரைப் போலவே இந்து முஸ்லிம் ஒற்றுமைக்குத் தென்னாட்டில் ஓர் உதாரணமாக இருந்தான் ஹைதர்.


பெங்களூருக்கு வடக்கே சிக்க பெல்லாபுரம் என்ற ஓர் ஊர் இருந்தது. அதை ஹைதருக்கு அடங்கிய சிக்கப்ப கவுடன் என்ற பாளையக்காரன் ஆண்டு வந்தான். ஒருமுறை ஹைதருக்குக் கொடுத்த வாக்கை அவன் காக்கத் தவறிவிட்டான். அதனால் சினம் கொண்ட ஹைதர் தன் படைகளோடு வந்து, சிக்க பெல்லாபுரம் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டு சிக்கப்ப கௌடனையும், அவனுடைய சுற்றத்தார்களையும் சிறைப்பிடித்தான். அப்படிச் சிறைப்பிடிக்கப்பட்டவர்களில் பைச்சே கவுடன் என்ற கிழவன் ஒருவனும் இருந்தான்.

பைச்சே கவுடன் சிக்க பெல்லாபுரம் பாளையக்காரனான சிக்கப்ப கவுடனுக்கு அண்ணன் மகன். குடுகுடு கிழவனாக இருந்தாலும் பைச்சே கவுடன் ஹைதரைப் போலவே மாவீரன். ஹைதர் மன்னனாக இருந்த காரணத்தால் அவனுடைய வீரம் எல்லோருக்கும் தெரிந்திருந்தது. அந்த வாய்ப்பு இல்லாத காரணத்தால் பைச்சே கவுடனின் வீரப் புகழ் குடத்திலிட்ட விளக்காக இருந்தது.

வாலிபனாக இருந்த காலத்தில் பைச்சே கவுடன் திருவிழாவின்போது முழுத் தேங்காயைத் தன் முழங்கால் முட்டியால் உடைத்து மாரியம்மனுக்குப் படைப்பானாம்! தேர் வடத்தை இடுப்பில் கட்டிக் கொண்டு சிவராத்திரியன்று நஞ்சுண்டேசுவரர் தேரைத் தான் ஒருவனாகவே இழுத்துக் கொண்டு வருவானாம்!

அப்படிப்பட்ட வீரக் கிழவனைக் கைது செய்து ஹைதருக்கு முன்னால் கொண்டு வந்து நிறுத்தினார்கள். சிறைப்பிடிக்கப்பட்டவர்களெல்லாம் ஹைதருக்குத் தலை வணங்கினார்கள். ஆனால் பைச்சே கவுடன் மட்டும் தலையைச் சிறிதும் தாழ்த்தாது கம்பீரமாக நின்று நேருக்கு நேராக ஹைதரின் முகத்தை நோக்கினான்.

மற்றவர்களைப் போல் தன்னைக் கண்டதும் சிறிதும் நடுங்காது, அந்தத் தள்ளாத நிலையிலும் கிழவன் பைச்சே கவுடன் தனக்குத் தலைவணங்காது கம்பீரமாக நின்று தன்னை நோக்கிய தோற்



நத்தைக் கண்டு ஹைதர் வியந்து போனான். ஹைதர் சிறுவனாக இருந்தபோது பைச்சே கவுடனின் வீரச் செயல்களைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறான். அதனால் அவனிடம் அவனுக்கு மதிப்புக்கூட இருந்தது. தன்னைச் சிறிதும் மதிக்காது அவன் நிமிர்ந்து பார்த்ததைக் கண்டதும், ''பைச்சே கவுடா! நீ என்னால் சிறைப் பிடிக்கப்பட்ட அடிமை. அதனால் மற்றவர்களைப் போல் நீயும் எனக்குத் தலைவணங்க வேண்டும்'' என்றான் ஹைதர்.

''கல்தான், இந்தப் பைச்சே கவுடனைப் பற்றி உங்களுக்குத் தெரியாது போலிருக்கிறது. என் பெற்றோர்களையும் தெய்வத்தையும் தவிர வேறு யாருக்கும் நான் தலைவணங்கியதில்லை. இனியும் தலை வணங்க மாட்டேன். எனக்குப் பெயரே வணங்காமுடி பைச்சே கவுடன்தான்'' என்றான் சிறிதும் அஞ்சாத பைச்சே.

தனியாக இருந்திருந்தால் ஹைதர் பைச்சே கவுடனை மன்னித்திருப்பான். அந்த அளவுக்கு அவனுடைய வீரமும் அஞ்சாத நெஞ்சமும் ஹைதரின் மனத்தைக் கவர்ந்திருந்தன. ஆனால் மற்றக் கைதிகளுக்கும் பணியாட்களுக்கும் முன்னால் தன்னைச் சிறிதும் மதிக்காது பேசியது ஹைதருக்குத் தன்மானத்தைப் பாதிப்பதாக இருந்துவிடவே கோபம் கொண்டு பைச்சே கவுடனைச் சிறையில் அடைத்துக் கொடுமைப்படுத்த ஆணையிட்டான். உண்மையில் பைச்சே கவுடனைப் பணிய வைத்து, அவனைப் பெருமைப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு இருந்த ஹைதர், அவனைக் கொடுமைப் படுத்த ஆணையிட்டதை எண்ணித் தானே மனம் கலங்கிக் கொண்டிருந்தான்.

உள்ளே வந்து வணங்கிய சிறைக் காவலாளி, ''கல்தான்! பைச்சே கவுடனை நாங்கள் எவ்வளவோ கொடுமைப் படுத்திப் பார்த்து விட்டோம். அவன் தெய்வத்தையும் பெற்றோர்களையும் தவிர வேறு யாருக்குமே தலை வணங்க மறுக்கிறான்'' என்றான்.

அந்தக் கிழவனைப் பணிய வைக்க ஹைதருக்கு ஒரு யோசனை தோன்றியது. காவலாளியை அனுப்பிப் பைச்சே கவுடனின் பெற்றோர்களின் ஓவியத்தை அரண்மனையிலிருந்து எடுத்து வரச் சொல்லி ஓர் அறையில் மாட்டும்படி செய்தான். அந்த ஓவியத்துக்கு மேல் தன்னுடைய ஓவியத்தை மாட்டினான். கட்டுக்களை அவிழ்த்துப் பைச்சே கவுடனை அந்த அறைக்குள் அனுப்பி வைக்கும்படி பணித்தான்.

தன்னுடைய பெற்றோர்களின் ஓவியத்தைக் கண்டதும் அதற்கு வணக்கம் செலுத்துவான். அதற்கு மேல் தன்னுடைய ஓவியம் இருப்பதால் அந்த வணக்கத்தைத் தனக்குச் செலுத்திய வணக்கமாகவே எண்ணிப் பைச்சே கவுடனை மன்னித்துப் பெருமை கொள்ளலாம் என்பதுதான் ஹைதரின் திட்டம்.

பைச்சே கவுடன் அறைக்குள் வந்தான். பெற்றோர்களின் ஓவியத்தைக் கண்டதும் அவன் முகம் மலர்ந்தது. கை குவித்துத் தலைவணங்கப் போனவன் அதற்கு மேல் மாட்டப்பட்டிருந்த

வீராதி வீரன்..... இதுவரையில்

கோகுலம் முதல் இரண்டாவது இதழ் கிடைக்காது ஏமாந்த சிலருக்கும் வீராதி வீரன் கதையின் ஆரம்பம் தெரிய வேண்டாமா?

கிழக்கு வங்காளம் பங்களாதேஷாகப் பிறவி எடுக்குமுன் பாகிஸ்தானியரின் வெறிச் செயலுக்கு ஆட்பட்டிருந்த நேரம், அங்கு ஒரு டாக்டர், அவர் விடுதலைப் படையின் அங்கத்தினர். அவரது மகன் ரஹீம் சந்தர்ப்ப வசத்தால் அவனும் முக்திவாஹினியினருக்கு உதவ வேண்டிய சூழ்நிலை உருவாகி விடுகிறது. ஒரு கோவேறு கழுதை, ஒரு நாய், ஒரு கிளி, ஒரு கீரி ஆகியவை ரஹீமின் நண்பர்கள். இவைகளை வைத்துக்கொண்டு ரஹீம் மேற்கு பாகிஸ்தானியருடன் போராடி அவர்களுக்குத் தொல்லைகள் கொடுத்துக் கைதியாகாமல் தப்பி வருகிறான். இனி மேலே படியுங்கள்.

ஹைதரின் ஓவியத்தைக் கண்டான். அவன் மகிழ்ச்சி மறைந்தது. ஹைதரின் இட்டம்தான் அது என்பதை அறிந்துகொள்ள அவனுக்கு அதிக நேரமாகவில்லை. தன் பெற்றோர்களின் ஓவியத்துக்கு வணக்கம் செலுத்தவும், அதே நேரத்தில் ஹைதரின் திட்டத்தைத் தோல்வியடையச் செய்யவும் பைச்சே உடனே ஒரு தந்திரம் செய்தான். தன்னுடைய தலைப்பாகையைக் கழற்றி ஹைதரின் ஓவியத்தின் மேல் மாட்டி அதை மறைத்தான். பிறகு மகிழ்ச்சியோடு தன் பெற்றோர்களின் ஓவியத்தைக் கரம் கூப்பி வணங்கினான்!

அடுத்த நாள் ஹைதர் இன்னொரு திட்டம் தயாரித்தான். அதன்படி கல்தானின் ஆலோசனை மண்டபத்தில் ஹைதரின் ஆசனத்துக்கு நேர் எதிரில் சுவரில் குறுகிய வாசல் ஒன்று அமைக்கச் செய்தான். அந்த வழியாக ஆலோசனை மண்டபத்துக்குள் வருபவர்கள் குனிந்து தலை தாழ்ந்துதான் வரவேண்டும். ஹைதரின் கட்டளைப்படி, பைச்சே கவுண்டனை அந்த வாசல் வழியாக அழைத்து வரக் கிளம்பினார்கள் காவலாளிகள்.


அந்தக் குறுகிய வாசலை நெருங்கும் போதே பைச்சே கவுடனுக்கு ஏதோ சந்தேகம் தோன்றி விட்டது. அந்த அறையிலிருந்து வீசிய அத்தரின் மணம் அவனுடைய சந்தேகத்தை உறுதிப்படுத்தியது. ஹைதருக்கு அத்தரின் மணம் மிகவும் விருப்பமானது. பைச்சே மாற்றுத் திட்டம் தயாரித்துக்கொண்டு அந்தக் குறுகிய வாசலை நெருங்கினான். உடலை வளைத்துத் தலை தாழ்ந்து அதில் நுழையாமல், தன்னுடைய இடது காலை அதன் வழியாக உள்ளே நீட்டி ஆட்டினான்! ஹைதருக்கு இழைக்கப்பட்ட மிகப் பெரிய அவமானமாக அதை எண்ணிய காவலாளி ஒருவன், நீட்டிய பைச்சே கிழவனின் இடது காலைக் கத்தியால் வெட்டினான். பைச்சே கிழவன் அஞ்சாது வலது காலையும் நீட்டினான். காவலாளி அதையும் வெட்டினான். இரண்டு கால்களையும் இழந்த நிலையில் பைச்சே கிழவன் நகர்ந்து அந்தக் குறுகிய வாசல் வழியாக ஆலோசனை மண்டபத்துக்குள் வந்தான்.

பைச்சே கிழவனின் நிலையைக் கண்டதும், தங்களை மறந்து ஹைதர் அலியும் அவனுடைய அமைச்சர்களும் அதிகாரிகளும் எழுந்து நின்று விட்டனர்!

''பைச்சே கவுடா, யாருக்குமே தலை வணங்காத உன்னைத் தந்திரத்தால் தலை வணங்க வைக்க முயன்றேன். என்னுடைய தந்திரத்தால் உன்னைப் பணிய வைக்க முடியவில்லை என்பதோடு என்னையே நீ பணிய வைத்து விட்டாய். இறுதி வெற்றி உனக்குத்தான் கிடைத்துள்ளது. வணங்கா முடியான உன் வீரம் மக்களின் மனத்தில் என்றும் பசுமையாக இருக்கும்'' என்று பைச்சே கவுடனின் நிலையைக் கண்டு கலங்கினான் ஹைதர் அலி. அவன் சிந்திய கண்ணீர் பைச்சே கவுடனின் உடலில் தெறித்துச் சிதறியது.


எதற்குமே வளைந்து கொடுக்காதவர்களைத் தமிழ் நாட்டில் கல்லுளிமங்கன் என்று கூறுவது போல் கொங்கு நாட்டிலும் கன்னடத்திலும் பைச்சே கவுடா என்று கூறிப் பைச்சே கவுடனின் வீரத்தை மக்கள் இன்னமும் நினைவு கூர்ந்து வருகிறார்கள்.


வீராதி வீரன்: கதை: கௌசிகன்
சித்திரம்: ரமணி..
3
ஜம்பு துப்பாக்கி விசையை இழுத்து விஷமம் செய்யவே..
ஜம்பு என்ன காரியம் செய்து விட்டாய்? நம் மறைவிடம் அந்தப் பாவிகளுக்குத் தெரிந்து விடும். அதனால் வீண் தொல்லையல்லவா?
தொப்பி துளைக்கப்பட்ட பாகிஸ்தானி அதிகாரி தன் ஆட்களுக்கு உத்தரவிட்டான்.
சதிகாரர்கள் பதுங்கி இருக்கிறார்கள். கைக் குண்டை உள்ளே வீசிக் கட்டடத்தைத் தகர்த்துத் தள்ளு.
பாகிஸ்தானி வீசிய கைக் குண்டு ஜம்புவின் தலையில் பட்டுத் துள்ளித் தரையில் விழுந்தது.
ஜம்புவுக்குத் தன் தலையில் விழுந்தது கைக்குண்டு என்றோ, அதன் அபாயம் பற்றியோ தெரியாது. ஆனால் தான் தாக்கப் பட்டதை எண்ணிக் கோபமடைந்த குரங்கு இமைக்கும் நேரத்தில் அந்தக் கைக்குண்டை எடுத்து வெளியே வீசியது...
கைக் குண்டு வெடிக்க வேண்டிய நேரத்துக்குச் சரியாக வெளியில் வந்து விழுந்தது. அடுத்த விநாடி பாகிஸ்தானியச் சிப்பாய்கள் பஞ்சாகப் பறந்தனர்.
குண்டு வெடித்த சத்தம் பல பாகிஸ்தானிய வீரர்களை அந்த இடத்துக்கு வரவழைத்துச் சோதனையிட வைத்து விட்டது.


அதிர்ஷ்டவசமாக இடிபாடுகள் ரஹீமின் நிலவறை வாயிலை மூடி அவன் இருப்பிடத்தை எதிரிகளின் பார்வையிலிருந்து மறைத்து விட்டன.
சாப்! இதோ ஒரு இந்திய சோல்ஜர் இங்கு ஒளிந்திருக்கிறான்...
இந்தப் பகுதியில் எங்கோ முக்திவாஹினிப் படையினர் பதுங்கி இருக்கிறார்கள். நன்றாகச் சோதனையிடுங்கள்.
இந்தியன் என்றால் அத்தனை ஏளனமா உங்களுக்கு? இந்தா இதை வாங்கிக் கொள்.
தன்னைப் பிடிக்க வந்தவனை அடித்து வீழ்த்திவிட்டு ஓடுகிறான் அந்தப் பாரத வீரன். இந்தப் பாவிகள் ஜீப்பில் அவனைத் துரத்திப் பிடிக்கப் போகிறார்களா. அல்லாஹ்... குதா! அந்த இந்தியனுக்கு நான் உதவ வேண்டும்...
ஜிம்மி.. ஓடு.. ஓடு! ஜீப்பில் இருப்பவர்களைத் தாக்கு விடாதே.. ராணி, நீயும் போ.. ம்.. எப்படியும் அவர்களிடம் அந்த இந்திய வீரன் பிடிபடக்கூடாது..
ஜிம்மியும் ராணியும் அவர்கள் மீது பாய்வதற்குள் ஒரு பாகிஸ்தானியன் தப்பி ஓடும் வீரனை நோக்கித் தன் துப்பாக்கி விசையைக் குறி பார்த்து இழுத்து விட்டான்.


ஒரே ஒரு குன்றுதான். அதற்குள் ஜிம்மியும் ராணியும் அவர்களைப் பறந்திய பாட்டில் ஜீப் ஓட்டி நிலை தடுமாற, வண்டி திசை தடுமாறி...
இடி பாடுகளில் மோதித் தலை குப்புறக் கவிழ்ந்தது. பாகிஸ்தானியர் பலத்த அடி பட்டு நினைவிழந்தனர். ஜிம்மியும் ராணியும் காயமின்றித் தப்பின.
குன்று அடி பட்டுக் காயமடைந்த இந்திய வீரனால் எழுந்து நடக்க முடியவில்லை. ஜிம்மியைத் தொடர்ந்து ஓடி வந்த ரஹீம் இந்திய வீரனின் நிலைமையை அறிந்து அவனை ஒரு டாக்டரிடம் கூட்டிப் போகத் தக்க ஏற்பாடு செய்தான். தன் பண்ணையிலுள்ள கோவேறு கழுதை மீது வீரனை ஏற்றி ஒரு பெரிய துணியால் அவனை மூடினான்....
ஏய..ய், பயலே! எங்கே போகிறாய்? நீ யார்? கழுதை மீது என்ன அது? மூடி இருக்கிறாயே.
பத்மாஷ்! நான் சந்தேகப் பட்டது சரியாகி விட்டது. சதிகாரப் பயலே! முஸல்மானாக இருந்து இந்திய வீரனுக்கு உதவும் நீ முக்தி வாஹினியைச் சேர்ந்தவனாகத்தானிருக்க வேண்டும். உங்கள் இருவரையும் என்ன செய்கிறேன் பார்?
தொடரும்

விஞ்ஞானத்தில் இன்று





கம்ப்யூடர் கார்

ஒரு விந்தையான கார். மின் சாரத்தினால் ஓடக் கூடியது. ரப்பர் டயர்கள். இதை இயக்குவது கம்ப்யூடர். இத்தகையதொரு காரில் சவாரி செய்ய உங்களுக்கு ஆசையாக இருக்கிறதில்லையா? பின் இருக்காதா? நீங்கள் விரும்பிய இடத்துக்கு இந்தக் கம்ப்யூடர் காரில் விபத்துக்கள் இல்லாமல் போக்குவரத்து நெரிசல் இல்லாமல் போகலாமே. அது மட்டுமா? பெட்ரோல் நாற்றம் கிடையாது. காற்று மண்டலம் கெட்டுப் போவதில்லை. இத்தகைய மோட்டார் கார்கள் வீதிகளில் ஓடுவதை விரைவிலேயே ஜப்பானியர்கள் காணப் போகிறார்கள். டோக்கியோவின் பொது மக்களின் போக்குவரத்து அமைப்பு இதற்கான ஆரம்ப வேலைகளில் ஈடுபட்டிருக்கிறது. நகரின் பிரதான 'ரூட்'டுகளில் இம்மாதிரியான கார்கள் மணிக்கு 6,000 வீதம் ஓடுவதற்குத் தக்கபடி சாலைகளில் போதுமான 'லேன்'களை அமைக்கப் போகிறார்கள். காரின் முன்னாலுள்ள கைகள் போன்ற இரு அமைப்புகளும் தண்டவாளத்தைப் பற்றிக் கொள்ளும். இந்தப் புதிய சாதனை செயல்படத் தொடங்கினால் மணிக்கு 60,000 மக்களை 14,000 கார்கள் சுமந்துகொண்டு பறக்குமாம். இது விஞ்ஞான யுகம். எதுதான் நடக்காது?

பனிப் பாறையின் அடியிலே

அலாஸ்காவைப் பற்றிப் படித்திருப்பீர்களே. பூகோளத்தில். உருகவே உருகாத உறை பனி மூடிய அந்த அலாஸ்கா எங்கே இருக்கிறது? வட அமெரிக்காவின் வடகோடியில், இல்லையா? இந்த உறைபனிப் படலத்துக்கு அடியிலே ஏராளமான எண்ணெய் இருக்கிறதாம். நல்லெண்ணெயோ தேங்காயெண்ணெயோ அல்ல. பெட்ரோல். யந்திர சாதனம் கொண்டு கிணறுகளைத் தோண்டி இறக்கினால் ஏராளமான பெட்ரோல் கிடைக்கும். ஆனால் இப்படி எடுக்கப்படும் எண்ணெயை எப்படித் தென்பகுதிக்கு அனுப்புவது? பெட்ரோல் இருப்பதைக் கண்டவர்களுக்கு அதைக் கொண்டு வரவா வழி தெரியாது? சப்மரைன் டாங்கர் மூலம் இதை வெளியேற்றப் போகிறார்கள். ஓர் அமெரிக்க நிறுவனம் இத்தகைய சப்மரைன் டாங்கருக்கு வடிவமைப்புச் செய்து பல எண்ணெய் நிறுவனங்களுக்கு வழங்கியிருக்கிறது. இந்த சப்மரைன் டாங்கர் 1,70,000 டன்கள் குருட் ஆயிலை 'நார்த் வெஸ்ட் பாஸேஜ்' பனிப் படலத்தின் கீழாக அட்லாண்டிக் கடலிலிருந்து பசிபிக் கடலுக்குக் கொண்டு வரும். அல்லது ஆர்டிக்கடலின் கீழாக, வட அமெரிக்காவின் கிழக்குக் கடற்கரைக்குக் கொண்டு வந்து சேர்க்கும். அங்கிருந்து இதைப் பெரிய குழாய்கள் வழியாகப் பல்வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லலாம்.





விண்வெளிக் காவலன்

பருவ நிலைகளைக் கண்டறியும் ஸாடலைட் (Weather Satellites) களோடும் வட்டமிடும் காவல் நாய்களோடும் (Orbiting watch dogs) விண்வெளியில் வானத்தின் கண்களும் (Eye with sky) இணையப் போகிறது இன்னும் ஒன்றிரண்டு ஆண்டுகளுக்குள். இந்தகைய ஸாடலைட்டுகள் அமெரிக்காவிலிருந்து ஏவிவிடப்படப் போகின்றன. எர்த் ரிஸோர்ஸஸ் டெக்னலஜி ஸாடலைட் (Earth resources technology satellite) என்பது இவைகளின் பெயர். ஒரு டன் எடையுள்ள இந்தச் சாதனம் செய்யக்கூடிய காரியங்கள் என்னென்ன தெரியுமா? பூமியில் விளையக்கூடிய உணவுப் பொருள்கள், கானகச் செல்வம் இவைகளையெல்லாம் கணக்கெடுக்கும். அதற்கான யந்திரச் சாதனங்களை இந்த ஸாடலைட் தாங்கியதாக இருக்கும். திடீரென்று கானகங்களில் தானாக ஏற்படும் காட்டுத் தீயைக் கண்டு பிடித்து அவை எந்த இடத்தில் அப்படி எரிகின்றன என்பதை விரைவில் அறியும்படி செய்து அனுப்பும். ஐஸ் பார்க் - பனிப் பாறைச் சரிவைக் கண்காணிக்கும். பூகம்பத்தை, வெட்டுக்கிளிப் பட்டாளத்தைக் காட்டிக் கொடுக்கும் இத்தகைய ஸாடலைட் இரண்டை நிர்மாணிக்க ஆகும் தொகை என்ன தெரியுமா? இருபது மிலியன் டாலர்கள். விண்வெளி ஆராய்ச்சியில் இன்றைக்கு முதன்மையாக முன்னேறிக் கொண்டிருக்கிறது அமெரிக்கா.



பிறந்தது எப்படி? அச்சுக்கலை

நீங்கள் படித்துக் கொண்டிருக்கும் 'கோகுலம்' பத்திரிகையை இதே நேரத்தில் தில்லியிலும், லண்டனிலும், இலங்கையிலும், சிங்கப்பூரிலும் உள்ள குழந்தைகள் படித்துக் கொண்டிருப்பார்கள். 'கோகுலம்' பத்திரிகையின் லட்சக்கணக்கான வாசகர்கள் ஒவ்வொருவரிடமும் ஒரு பிரதி இருக்கும்படியாக இன்று எங்களால் செய்ய முடியும். அது எப்படி? மனிதன் கண்டுபிடித்த எத்தனையோ அதிசயங்களில் ஒன்றான அச்சுக் கலை நிகழ்த்தும் அற்புதம்தான் இது. இன்றுள்ள அச்சு யந்திரத்தையும், காகிதத்தையும் மனிதன் கண்டுபிடிப்பதற்குமுன் தன் எண்ணங்களை அவன் எப்படி வெளியிட்டான்? எதில் எழுதினான்?

வேத காலத்தில் அச்சு யந்திரம் உண்டா? இல்லை. இதிகாசங்கள், உபநிஷத்துக்கள் மற்றும் அது போன்ற மகத்தான இலக்கியங்களையெல்லாம் வாய் மொழியாகவே வழி வழியாகப் பயிற்றுவித்துப் பரப்பினார்கள் நம் முன்னோர். ஓர் ஆசானிடம் பலர் பயின்று அதை மனனம் செய்து நினைவில் நிறுத்திக் கொள்ளுவார்கள். அவர்கள் இன்னும் பலருக்குப் பயிற்றுவிப்பார்கள். இப்படித்தான் பண்டைய இலக்கியங்கள் வளர்ந்து பரவின. இதற்கு அடுத்த நிலையாக ஓலைச் சுவடிகள் வந்தன. பனை மரத்தின் இலையைப் பதம் செய்து அதில் எழுத்தாணி என்ற கூரான ஆயுதம் கொண்டு தங்கள் எண்ணங்களை எழுதி வடித்தார்கள். இம்முறையிலும் ஓர் இலக்கியத்துக்கு ஓர் ஓலைச் சுவடிதான் கிடைக்கும். அதைப் பாதுகாப்பதால் பல பேர் படித்துப் பயன் பெறலாம். இன்று போல் ஒரு புத்தகத்தின் பல லட்சம் பிரதிகளை ஒரே சமயத்தில் அச்சிட்டு விநியோகிக்க முடியாவிட்டாலும் மேல் நாட்டில் ஆதியில் வேறொரு முறையைக் கையாண்டார்கள். அதாவது மூலப் பிரதியைப் பார்த்து அதே போல் இன்னொரு பிரதியை எழுதினார்கள்; பிரதி எடுத்தார்கள். மூலப் பிரதியில் உள்ளதுபோலவே படங்களையும் வரைந்தார்கள். 'காப்பி' எடுத்த பிரதிகள் மூலத்தைப் போலவே இருக்குமா? இருக்காது. இப்படிக் 'காப்பி' (பிரதி) எடுத்தது எதிலே? காகிதத்திலா?— இல்லை. கன்றுக்குட்டி அல்லது ஆட்டுக்குட்டியின் பதப்படுத்திய மெல்லிய தோலிலேதான். பண்டைக் காலத்தில் மேலை நாடுகளில் அறிஞர்கள் தங்கள் எண்ணங்களை



வடித்தது பார்ச்மெண்ட் அல்லது வெல்லம் (சப்புக் கொட்டாதீர்கள். நீங்கள் சாப்பிடும் வெல்லமல்ல இது!) என்று சொல்லப்படும் இந்தத் தோல் காகிதத்தில்தான்.

ஒவ்வொரு கிறிஸ்துவ மடாலயங்களிலும் சில பாதிரிமார்கள் பைபிளேயோ தியானப் புத்தகங்களையோ பல மாதங்கள் பாடுபட்டுப் பிரதி எடுப்பதையே தங்கள் வாழ்நாள் முழுதும் செய்து கொண்டிருந்தார்கள். பெரிய பெரிய நகரங்களிலுள்ள புத்தக வியாபாரிகள் அரிய இலக்கியங்களைக் 'காப்பி' செய்து புத்தகங்களை உருவாக்குவதற்காகவே பலரை வேலைக்கு வைத்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு புத்தகத்தை வரிக்கு வரி, படத்துக்குப் படம் அப்படியே கையால் எழுதிக் காப்பி செய்து இன்னொரு பிரதி தயாரிப்பதென்றால் அது சாமானியமான வேலையா?

புத்தகங்களை அதிக அளவிலும் வேகமாகவும் பல பிரதிகள் தயாரிக்கும் ஒரு புதிய முறையை மனிதன் கண்டுபிடித்த போது அதற்குக் காகிதமும் உறுதுணையாக வந்து சேர்ந்தது. காகிதத்தின் உபயோகம் தெரிந்திருக்கா விட்டால் அச்சு இயந்திரம் இத்தனை பிரபலமாகி இருக்க முடியாது. காகிதத்தைக் கண்டு பிடித்தது யார்? சீனர்கள். அதை எப்படிக் கண்டுபிடித்தார்கள் என்பது தனிக் கதை. கி. பி. நூறாவது ஆண்டிலேயே சீனர்களுக்குக் காகிதத்தின் உபயோகம் தெரிந்திருந்தது. இங்கிருந்து இஸ்லாமிய நாடுகளுக்கு இது பரவியது. இதன்பின் பல நூறு வருஷங்கள் கழித்தே ஐரோப்பிய நாடுகளுக்குக் காகிதத்தைப் பற்றிய செய்தி தெரியலாயிற்று.

ஐரோப்பாவில் அச்சுக் கலையின் ஆரம்பக் கட்டம் 1450-ம் ஆண்டு தோன்றியது. புத்தகங்களைப் பெரும் அளவில் தயாரிக்கக் காகிதமே மலிவான சாதனம் என்பதை உணர்ந்தார்கள். அது சரி, அச்சுக் கலையை யார் எப்படி, முதலில் கண்டுபிடித்தார்கள். இந்தப் பெருமையும் சீனர்களுக்கே போகிறது. இன்று முன்னேற்றமடைந்துள்ள அச்சு யந்திரத்தைப் போல் அது இல்லாவிட்டாலும், விரைவில் பல பிரதிகளை ஒரே மாதிரித் தயாரிக்கும் முறையைச் சீனர்கள்தான் முதலில் கண்டுபிடித்தார்கள். இதற்கு 'வுட்கட்' என்று பெயர். அதாவது சமதளமாக்கப்பட்ட சொர்ரி மரப் பலகையின் மீது படங்களை வரைவார்கள். படம் உள்ள பகுதி போக மற்றப் பாகங்களைக் கவனமாகத் தக்க ஆயுதம் கொண்டு செதுக்கி எடுத்து விடுவார்கள். குறிப்பிட்ட சித்திரப் பகுதி மட்டும் மேடாக இருக்கும். இந்த உயர்ந்த பகுதியின் மீது மையைத் தடவி அதன் மீது ஒரு காகிதத்தை வைத்து அழுத்துவார்கள். வரைந்த படத்தின் இதே போன்ற ஒரு பிரதி ஆனால் இடம் வலமாகக் காகிதத்தில் விழுந்திருக்கும். இன்னொரு பிரதி தேவையானால் அதன் மீது மறுபடியும் மசியைத் தடவிக் காகிதத்தை வைத்து அழுத்தி எடுத்துக் கொள்ளுவார்கள். இதுதான் முதன் முதலில் சீனர்கள் கண்டுபிடித்த அச்சுக் கலையின் ஆரம்பம்.

முதன் முதலில் மரத்தினாலான அச்சுக் கலையைக் கண்டுபிடித்த சீனக்காரரின் பெயர் என்ன தெரியுமா? ஃபெங்டோ.

ஆதியில் சீனாவிலும் புத்தகங்களைக் கையால் எழுதித்தான் வந்தார்கள்... ரொம்பவும் கஷ்டமான வேலை. மிகுந்த பொருட் செலவுடையதும்கூட. இந்த ஃபெங்டோ என்பவர் சீன மன்னரின் மந்திரி சபையில் ஓர் அமைச்சராக இருந்தார். ஒரு நாள் இவருக்கு ஓர் அற்புதமான யோசனை தோன்றியது. மன்னரிடம், "அரசே! சாமானியனுக்கும் நமது இலக்கியங்கள் கிடைக்கும்படியாகச் செய்ய என்னிடம் ஒரு திட்டமுள்ளது" என்று கூறினார்.

"அதைச் செயல்படுத்துவது எப்படி?" என்று கேட்டார் மன்னர்.

ஃபெங்டோ விளக்கினார்: "ஒரு புத்தகத்தின் வார்த்தைகளை ஒரு மரப் பலகையில் செதுக்கித் தயாரித்துக் கொள்ள வேண்டியது. இந்த மரப் பலகையிலிருந்து எத்தனை பக்கங்கள் வேண்டுமானாலும் அச்சடித்துக் கொள்ளலாமே!"

மிகச் சுலபமான வழி. இது ஏன் அது வரை வேறு யாருக்கும் தோன்றவில்லை? மன்னர் ஃபெங்டோவுக்கு அனுமதியளித்து விட்டார். மனித சமுதாயத்தின் மறுமலர்ச்சிக்கு வழிகாட்டியாக விளங்கப் போகும் அவரது முயற்சியைச் செயல்படுத்தும்படி கூறினார்.

மிக உற்சாகத்துடன் ஃபெங்டோ உழைக்கலானார். பல சீன அறிவாளிகளின் உதவியை நாடினார் ஃபெங்டோ. சீனத்து இலக்கியங்களைச் சீரான மரப் பலகைகளின் மீது எழுதித் தரும்படி கேட்டுக் கொண்டார். இந்த வேலை முடிந்ததும் இந்தப் பலகைகளைத் திறமை மிக்க கைவினைக் கலைஞர்களிடம் கொடுத்துப் பலகைகளைக் குடைந்து எழுத்துக்களைச் செதுக்கும்படி செய்தார். இப்படி முழுமைபெற்ற பிளாக்குகளைக் கொண்டு ஃபெங்டோ சீன இலக்கியங்களைத் தேவையான பிரதிகள் அச்சடித்துக் கொண்டார். உலகின் முதல்

அச்சடிக்கப்பட்ட புத்தகம் தயாராயிற்று. இப்படிச் சீன இலக்கியப் புத்தகங்களைத் தயாரிக்க ஃபெங்டோவுக்கு இருபது வருடங்கள் பிடித்தன. கி. பி. 953ம் ஆண்டில், மரப் பலகை எழுத்துக்களால் அச்சடிக்கப்பட்ட சீன இலக்கியங்களின் ஒரு புத்தகப் பிரதியை மன்னருக்கு ஃபெங்டோ அர்ப்பணித்தார். அப்போது அவர் குடுகுடு கிழவராகி விட்டார். இன்று அச்சுக் கலை இத்தனை தூரம் முன்னேறியிருப்பதற்குக் காரணமான ஃபெங்டோ அதற்காகத் தம் வாழ்நாளையே அர்ப்பணித்திருக்கிறார்.

இதன் பிறகு பதினொன்றாம் நூற்றாண்டின் மத்தியில் அச்சுக் கலையில் மற்றொரு புதுமை உண்டாயிற்று. அதுவும் சீனாவில்தான். தனித் தனியாக நகர்த்தி மாற்றி அமைக்கக் கூடிய முறை. இதைக் கண்டுபிடித்தவர் ஒரு சாதாரண ஏழை அச்சுத் தொழிலாளியான 'பீஷெங்' என்பவர். ஒரே மாதிரியான தனித் தனியான மெழுகுக் களிமண் துண்டுகளின் மீது எழுத்துக்களைச் செதுக்கிக் கொண்டார் பீஷெங். இந்தக் களிமண் எழுத்துக்களை நெருப்பிலிட்டுச் சுட்டுக் கெட்டியாக்கினார். இப்படித் தயாரித்த சிறிய எழுத்துக்களை ஓர் இரும்புப் பலகையில் பைன் மரக் கோந்தும் காகிதச் சாம்பலும் கொண்டு அடுக்கி அமைத்தார். புத்தகத்தின் ஒரு பக்கம் இப்



படித் தயாரிக்கப்பட்டது. தேவையான பிரதிகள் அச்சடித்துக் கொண்டதும் பீஷெங் இரும்புப் பலகையை அடுப்பின் மீது வைத்துக் கோந்தை இளகச் செய்தார். களி மண் எழுத்துக்களை இதனால் கலபமாக அந்த அமைப்பிலிருந்து விடுவித்து வேறு பக்கம் தயாரிக்கப் பயன்படுத்தலானார்.

கரடு முரடான முறைதான் இது. ஆனால் இன்று முன்னேற்றமடைந்துள்ள நகர்த்தி மாற்றியமைக்கும் அச்சு எழுத்துக்களுக்கு அடிகோலிவிட்டார் பீஷெங்.


இம்மாதிரி அச்சு எடுக்கும் முறையை முதன் முதலில் ஐரோப்பாவில் விளையாடும் சீட்டுக் கட்டுக்களைத் தயாரிக்கத்தான் பயன்படுத்தினார்கள். புத்தகங்கள் தயாரிக்க இம்முறை அவ்வளவாகப் பயன்படவில்லை. ஏனென்றால் மரப் பலகையில் ஒவ்வோர் எழுத்தையும் அல்லவா செதுக்கி உருவாக்கவேண்டும்? அதுவும் திரும்பிய முறையில் கையால் எழுதுவதைவிட இது கஷ்டமான காரியமாக இருந்தது. ஆனாலும் ஒரு சில புத்தகங்கள் இம் முறையில் ஆதியில் தயாரிக்கப்பட்டன. ஆனால் 1450ம் ஆண்டு அச்சுக் கலையில் மகத்தான முன்னேற்றம் ஏற்பட்டது. அதை யார் கண்டுபிடித்தார்கள் என்பதை உறுதியாகச் சொல்ல முடியாது. ஆனால் ஜெர்மனி தேசத்திலுள்ள மெயின்ஸ் நகரவாசியான **ஜான் கட்டன்பர்க்** என்பவர்தான் இன்றுள்ள புதிய புரட்சிகரமான அச்சுக் கலைக்கு வித்திட்டவர் என்று நம்பப்படுகிறது. இதே சமயத்தில் இவரைப் போலவே இன்னும் பலரும் எழுத்துக்களைக் கோக்கும் முறையைப் பற்றி ஏதாவது ஒரு வகையில் ஆராய்ச்சி செய்திருக்கலாம்.

ஏன் இப்படிக்கூட செய்திருக்கலாம். சீட்டுக் கட்டுத் தயாரிக்கும் தொழிலாளி ஒருவர் டைமண்ட், கிளாவர், இஸ்பேட், ஆட்டின் ஆகியவைகளை 'மரத்தில்' ஏராளமாகச் செதுக்கி வைத்துக் கொண்டு எது தேவையோ அந்த இனத்தில் பல 'உட்கட்'களை ஒன்று சேர்த்துக் கட்டி அதில் மையைத் தடவிப் பிரதி எடுத்திருக்கலாம். இதனால் ஒரு சீட்டுக் கட்டுத் தயாரிக்க ஐம்பத்தாறு 'வுட்கட்'களைத் தனியாகச் செதுக்கும் சிரமம் குறையுமில்லையா ?

இப்படிச் சீட்டுக் கட்டுத் தயாரிக்கும் முறையில் கலப நிலை ஏற்பட்டதைக் கண்ட இன்னொருவர் ஏன் இதே மாதிரி எழுத்துக்களையும் தனித் தனியாக ஏராளமாகச் செதுக்கிக் கொண்டு செயல்படக் கூடாது என்று யோசித்திருக்கலாம் இல்லையா ? இதிலும்கூட இன்னும் சீர்திருத்தங்கள் செய்ய முனைந்திருப்பார்கள். மரத்தினாலான எழுத்துக்கள் அதிக நாட்கள் வராது. தவிர ஒவ்வோர் எழுத்தையும் செதுக்கிக் கொண்டே இருப்பதானால் எத்தனை காலம் வீணாகும்? ஆகவே, 'மோல்ட்' தயார் செய்து ஒரே சமயத்தில் பல எழுத்துக்களைச் சுலபமாக உருவாக்கும் வார்ப்பு முறையைக் கண்டுபிடித்திருப்பான் மனிதன். இதுதான் இன்றைய நவீன அச்சுக் கலையின் ஆணி வேராக அமைந்தது. இப்படி உலோக எழுத்துக்களை வார்ப்பதற்குக் 'காஸ்டிங்' என்று பெயர். இந்தக் காஸ்டிங் முறையை உருவாக்கியவர்தான் ஜான் கட்டன்பர்க்.


இப்படி அச்சுக் கலையில் புரட்சியும் முன்னேற்றமும் ஏற்பட்டதும் ஜெர்மனி, இத்தாலி, நெதர்லாந்து ஆகிய நாட்டின் பெரிய நகரங்களில் எல்லாம் அச்சுத் தொழிலை விரிவாக்கி வளர்க்கலானார்கள். இதன் பிறகு ஸ்பெயின், பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கும் இக்கலை பரவியது. அமெரிக்காவைக் கண்டுபிடித்து ஐம்பது ஆண்டுகள் ஆகும் முன்னதாகவே மெக்ஸிகோ நகரில் ஓர் அச்சுத் தொழிலாளி உருவாகிவிட்டான் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். அச்சுக்கலை அவ்வளவு வேகமாக வளரலாயிற்று. ஒரே சமயத்தில் பல நூறு பிரதிகள் எடுக்க முடியும் என்ற நிலை ஏற்பட்டபோது புத்தகங்கள் வாங்க வேண்டும் என்ற வேகம் மக்களிடையே வளரலாயிற்று.

அச்சுக் கலை உருவான ஐம்பது ஆண்டுகளுக்குள் 40,000 புத்தகங்களின் பதிப்புக்கள் வெளியாயின. சுமார் எழுபது லட்சம் பிரதிகள் அச்சடிக்கப்பட்டன. பதினைந்தாவது நூற்றாண்டில் மெயின்ஸ் நகரைச் சேர்ந்த ஜான் கட்டன் பர்க் எந்த முறையைப் பின்பற்றிப் புத்தகத்தின் பிரதிகளைத் தயாரித்தாரோ அந்த முறையில் இதன் பிறகு சுமார் 400 ஆண்டுகளுக்கு எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. அதன் பிறகு ? பல நவீன வசதிகளும் முறைகளும் வந்துள்ளன. அவை எல்லாம் பற்றிப் பிறகு தெரிந்து கொள்ளலாம். இன்றைய அச்சுக் கலையின் ஆரம்ப கதை இதுதான். அச்சுக் கலையின் தந்தை என்று ஜான்கட்டன் பர்க்கைச் சொல்லுகிறார்களே, மேலை நாட்டார், அவர் என்ன கஷ்டங்களை அனுபவித்து எத்தனை பாடுபட்டு எழுத்துக்களைத் தனித் தனியாக உருவாக்கும் முறையைக் கண்டுபிடித்தார் தெரியுமா? அது சுவையான வரலாறு. இன்னொரு இதழில் அவருடைய சுவைமிக்க வாழ்க்கையைப் பற்றிச் சொல்லுகிறேன்.




இந்தப் படத்தில் சில எண்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு ஸ்கேலை எடுத்துக் கொள்ளுங்கள். கீழே கொடுத்துள்ள முறைப்படி இரு எண்களையும் நேர்க் கோடுகளால் இணையுங்கள். அதன்பிறகு அந்தக் கோடுகள் ஏற்படுத்திய அமைப்புக்களில் எதிலெல்லாம் 'C' உள்ளதோ அவைகளை வர்ணப் பென்சிலால் பூசுங்கள். உங்களுக்குப் பிடித்தமான தோர் உருவம் கிடைக்கும்.

1 லிருந்து — 11க்கு, இதே போல 2–10, 3–14, 3–17, 4–15, 4–16, 5–19, 6–13, 7–18, 8–12, 9–14, 12–18.




மூளைக்கு வேலை

முன்னொரு காலத்தில் இரண்டு பிராணிகள் ஓட்டப் பந்தயத்தில் ஈடுபட்டனவாமே, அந்தக் கதை உங்களுக்கெல்லாம் தெரிந்திருக்குமே! அந்த ஓட்டப் பந்தயத்தில் பங்கு கொண்ட இரண்டு பிராணிகள் என்னென்ன? தெரிந்து கொள்ள விரும்பினால் இங்கு உள்ள படத்தில் புள்ளியிட்ட பகுதிகளுக்கு நீல வர்ணம் கொடுத்துப் பாருங்கள். பந்தயத்தில் தோற்ற பிராணி வெளிப்படும். 'எக்ஸ்' குறியிட்ட பகுதிகளுக்குச் சிவப்பு வர்ணம் தீட்டுங்கள். வெற்றி பெற்ற பிராணி வெளிப்படும்.




மீன் பிடிக்கப்போன படகு கடலில் வழி தவறி அலைந்து கொண்டிருக்கிறது. அதைக்கரைக்குக் கொண்டு வந்து சேருங்கள். பார்க்கலாம். கோட்டைக் குறுக்காகத் தாண்டாமல் வழியோடு வர வேண்டும்.



அந்த நாய்க் குட்டியும் முயலும் நண்பர்கள். அவை இரண்டும் ஓடிப் பிடித்து விளையாடுகின்றன. முயலின் வேகம் நாய்க்குட்டிக்கு வருமா? அது முன்னால் ஓடி விட்டது. முயலைப் பிடிக்க நாய்க் குட்டி தன் நண்பனைப்போலவே தாவித் தாவிச் சென்றது. எத்தனை தாவலில் முயலிடம் அதனால் போக முடியும்? தாவல்கள் இரட்டைப்படை எண்களாக இருக்க வேண்டும். கோட்டின் வழியே போகலாம். ஒவ்வொரு புள்ளியும் ஒரு தாவலாகக் கணக்குப் பண்ணவும். ஐந்து முறைகளுக்கு மேல் முயற்சி செய்யக் கூடாது.

★ ★ ★

கணக்கு வாத்தியார் கரும்பலகையில் சில எண்களை எழுதியிருக்கிறார். 'கூட்டுத் தொகை 80 வரும்படியாக ஏதாவது மூன்று எண்களைத் தேர்ந்தெடுங்கள்' என்று கூறுகிறார். உங்களால் முடியுமா? (29, 35, 16)



ரயில் நண்பன்



ரயில் 'கூ'வென்று கூவி விட்டு, குருணிப் புகையையும் அள்ளி விட்டுக் கொண்டு புறப்பட்டது.

உயர்வகுப்புப் பெட்டி. தன் செல்வச் சிறுவனுக்குக் குளிர் காற்று அடிக்கப்போகிறதே என்பதற்காக, அந்த அன்புத் தாயார் ஜன்னலின் கண்ணாடி மூடியை இழுத்துச் சாத்தினாள்.

இருளைக் கிழித்துக் கொண்டு, நல்ல வேகம் எடுத்து ஓட ஆரம்பித்தது ரயில். இரவு மணி ஒன்பதரை ஆகிவிட்டது.

பாலன் இன்னும் தூங்காமல் கொட்டக் கொட்டக் கண் விழித்திருந்தான். அந்த உயர் வகுப்புப் பெட்டியில் அவர்கள் இருவரையும் தவிர வேறு யாருமில்லை.

சென்னையில் ஓர் உறவினர் வீட்டுக் கல்யாணத்துக்கு வந்துவிட்டுத் திருச்சிக்குத் திரும்பிப் போகிறார்கள் அவர்கள்.

பாலனுக்குத் தூக்கம் வந்தால்தானே?

''அம்மா! ஒரு கதை சொல்லு...''

''கதையாவது இதையாவது? பேசாமல் தூங்குடா!'' என்றாள் பார்வதி கொட்டாவி விட்டுக் கொண்டே. ரயில் அப்போதுதான் சென்னையை விட்டுப் புறப்பட்டிருந்தது. இன்னும் தாம்பரத்தைக் கூட அடையவில்லை. கொஞ்ச நேரம் ஆயிற்று. அம்மா நல்ல தூக்கத்தில் ஆழ்ந்து விட்டதைக் கவனித்தான் பாலன்.

பசித்தாற் போலிருந்தது பாலனுக்கு. பெஞ்சிக்கு அடியில் பழக் கூடையிலிருந்து அருமையான ஆப்பிள் பழங்களின் வாசனை மூக்கைத் துளைத்தது.

போர்வையை உதறி விட்டுப் பெஞ்சியிலிருந்து மெதுவாக இறங்கினான் பாலன். பெஞ்சிக்கு அடியில் குனிந்து பழக் கூடையில் கையை விடப் போன போது —

அங்கே அவன் கண்டதென்ன?

பெஞ்சிக்கு அடியில், கூடைக்கு அருகில் ஒரு பையன் உட்கார்ந்திருந்தான்! பாலனை விடக் கொஞ்சம் வயசில் பெரியவனாக இருப்பான், அவ்வளவுதான். நல்ல கருளான தலைமயிர்; அதை அந்தப் பையன் வாரவே இல்லை.

அவனைக் கண்டதும் பாலனுக்கு ஒரே மகிழ்ச்சி!

''ஏன் அங்கே உட்கார்ந்து கொண்டிருக்கே? வெளியே வா!...'' என்றான் பாலன்.

''உஷ்...'' என்று அந்தப் பையன் உதட்டில் கையைப் பொருத்திச் சாடை காட்டிக் கொண்டே மெதுவாகச் 'சீட்'டுக்கு வெளியே வந்தான். பாலனின் கையைப் பிடித்துக் கொண்டு பெஞ்சியின் மறு கோடிக்கு — பார்வதி விழித்துக் கொள்ளாதவாறு — விலகிச் சென்றான்.

இருவரும் அங்கே எதிர்ப் பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டார்கள்.

''உன் பேர் என்ன?'' பாலன் கேட்டான்.

''என் பேர் வினோத். உன் பேர்?''

''பாலன். அது சரி, நீ எப்போ வண்டியிலே ஏறினே? இப்படி எதற்காக அழுக்குச் சட்டை போட்டுக் கொண்டிருக்கிறே? தலையிலே எண்ணெய் வைச்சுச் சீவிக்கலையா?''

''அதுக்கெல்லாம் நான் கொடுத்து வைக்கலே, பாலா!''

''சரி, வினோத்! உனக்குக் கதை சொல்லத் தெரியுமா?''

வினோத் பாலனை ஆச்சரியத்துடன் பார்த்தான். அடுத்த வினாடி, வண்டி ஏதோ ஒரு ஸ்டேஷனைத் தாண்டிக் கொண்டிருக்கவும், ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தான். குரோம்பேட்டை ஸ்டேஷன் போய்க் கொண்டிருந்தது. அடுத்தது தாம்பரம். அங்கே அவன் இறங்கிவிட வேண்டும்; இல்லாவிட்டால் பார்வதி விழித்துக் கொண்டு விட்டால்? அதற்குள்...

''ஏன் சும்மா இருக்கே வினோத்? எனக்கு எப்போதும் ஆயா கதை சொல்லுவா. ராத்திரி நேரத்திலே யாராவது கதை சொன்னாத்தான் எனக்குத் தூக்கமே வரும். அதனாலே நீ இப்போ எனக்கு ஒரு கதை சொல்லுவியாம்....'' என்று பாலன் கெஞ்சினான்.

''பாலா! முதலில் என் பசி அடங்க வேண்டும். அடுத்த ஸ்டேஷனில்

இறங்கி ஏதாவது சாப்பிட்டுவிட்டு வருகிறேன். அப்புறம் கதை...''

''பசிக்குதா? இதோ!'' பாலன் எழுந்து சென்று இரண்டு ஆப்பிள் பழங்களை எடுத்து வந்தான். ஒன்றைத் தனக்கு வைத்துக்கொண்டு, மற்றொன்றை வினோத்திடம் நீட்டினான்.

நல்ல உயர்ந்த ஜாதி ஆப்பிள்பழம் அது! அரை நிமிஷத்தில் வினோத்தின் பல்லில் அரைபட்டுக் கரைந்து போயிற்று!

'கட கட கட.'

வண்டியின் வேகம் சீராகக் குறைந்து வரத் தொடங்கியது. தாம்பரம் ஸ்டேஷன் நெருங்கி வந்து கொண்டிருந்தது.

வினோத் பரபரத்தான். அவன் எதைச் செய்ய வேண்டும்?

கண்ணுக்கெதிரே பார்வதியின் தலைமாட்டுக்கு அருகில் சிறிய பூப் பைக்குள் அவர்களுடைய பெரிய பர்ஸ் வெளியே தெரிந்து கொண்டிருக்கிறது. பாலனுடன் பேசிக்கொண்டிருக்கும் போதே வினோத்தின் பழக்கப்பட்ட மின்னல் கண்கள் அந்தப்பர்ஸைக் கவனித்து விட்டன.....ஆனால்....?

பாலனின் பால்வடியும் முகத்தைப் பார்த்தான் வினோத். இரவில் தனக்குத் தூக்கம் வருவதற்காக, ஒரே ஒரு சின்னக் கதைக்காக ஏங்கி நின்ற அந்தக் குழந்தை முகத்தைப் பார்த்தான்....

வினோத்துக்கு ஒரு பழக்கம் என்றால், பாலனுக்கும் ஒரு பழக்கம். ஆனால் இரண்டினிடையிலும் எப்படிப்பட்ட மகத்தான வேறுபாடு!

கையில் பாதி கடித்த ஆப்பிளும் கையுமாகப் பாலனின் ஆர்வ விழிகள், 'கதை என்று தன் வாயால் நாலு வார்த்தை எப்போது வரும்' என்று உற்றுப் பார்த்துக்கொண்டிருந்ததையும் வினோத் கவனித்தான்.

அதே சமயம் தாம்பரம் பிளாட்பாரத்துக்குள் ரயில் வண்டி பிரவேசித்துக் கொண்டிருந்தது. இருப்பிடத்திலிருந்து 'பரபர' வென்று வேகமாக எழுந்தான் வினோத்.

''ஸ்டேஷன் வந்துவிட்டது, பாலா! இதோ நிமிஷத்தில் ஏதாவது சாப்பிட்டுவிட்டு வந்து, உனக்குக் கதை சொல்லுகிறேன்'' என்றான்.

வண்டி நின்றது. சடாரென்று இறங்கிச் சென்று விட்டான் வினோத்.

வண்டி 'கூ' வென்று அலறிவிட்டு மறுபடியும் புறப்பட்டது. வினோத் திரும்பவே இல்லை.

பாலன் ஆச்சரியத்தோடு மறுபடியும் குனிந்து பெஞ்சிக்கடியில் பார்த்தான், தனது நண்பன் மாயமாய் மறுபடியும் அங்கே வந்து உட்கார்ந்திருக்கிறானோவென்று.

கதை சொல்கிறேன் என்று சொன்னவன் கதை சொல்லாமல் மறைந்து விட்ட மாயம் என்ன? அப்படியே பெஞ்சி மெத்தையில் படுத்துத் தூங்கி விட்டான் பாலன்.

விடியற்காலையில் திருச்சி சந்திப்பில் பாலனின் தந்தை அவன் கன்னத்தை ஆசையாகக் கிள்ளினார். பாலன் சொன்னான்:


''அப்பா! அம்மா நேத்து ராத்திரி கதை சொல்ல மாட்டேன்னு—சொல்லி விட்டாள்; ஒரு பையன் வந்து ரயிலில் கதை சொல்றேன்னு சொல்லி ஏமாற்றி விட்டு அவனும் இறங்கிப் போய் விட்டான்.''

தான் கண்டிருக்கக் கூடிய ஒரு சொப்பனத்தைப் பற்றிக் குழந்தை அழகாகச் சொல்கிறான் என்று பெற்றோர் நினைத்துச் சிரித்தார்கள்.

ஆனால் பாலன் அளித்த அந்த ஓர் ஆப்பிள் பழம், வினோத்துக்கு உண்மையாக வாழ்வதன் அருமையான படிப்பினையையே—ஊட்டி விட்டது என்பது அவர்களில் யாருக்குமே தெரியாது!

''கடவுளே! அந்தப் பையனுடைய கதை கேட்கும் பழக்கம் என்னுடைய இந்தத் தகாத திருட்டுப் பழக்கத்தைச் சாக அடித்து விட்டது... இனி எவருடைய பொருளையும் தொட மாட்டேன்!''

தாம்பரத்தில் வண்டியிலிருந்து இறங்கிய போது வினோத் தனது உள்ளத்தில் உருவாக்கிக்கொண்ட வைராக்கியம் இது.



க.பஞ்சாபகேசன்

தேயிலையின் கதை



'டீ பார்ட்டி' என்று அழைப்பிதழில் போட்டிருப்பார்கள். ஆனால் அங்கு கொடுப்பதோ காப்பி பானமாக இருக்கும். காப்பி கொடுத்தாலும் அதற்கு டீ பார்ட்டி என்றுதான் பெயர். இத்தனை பெருமை பெற்ற தேயிலையை (டீ) முதன் முதலில் யார் கண்டுபிடித்தார்கள் தெரியுமா? சீனக்காரர்கள் தாம். கி. மு. 2737ம் ஆண்டிலேயே சீனர்களுக்குத் தேயிலையின் உபயோகம் தெரிந்திருக்கிறது. சீனர்கள் தேயிலையின் உபயோகம் பற்றி அறிந்ததே ஒரு கதை.

சீன மன்னர் ஷென் நுங் கானகத்தில் ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்தார். அவர் முன்னே, குடிப்பதற்கான நீர் ஒரு பாத்திரத்தில் அடுப்பின் மீது வைத்துக் காய்ந்து கொண்டிருந்தது. அப்போது அந்த மரத்திலிருந்து பறந்து வந்த சில இலைகள் அந்தக் கொதி நீரில் விழுவே அது பொன்னிறமாக மாறியது. இனிமையான நறுமணமும் கூடியது. குடித்ததும் புதுத் தெம்பும் ஏற்பட்டது மன்னருக்கு. தேயிலைப் பானம் தோன்றிய கதை இதுதான்.

சீனாவிலிருந்து இந்தியாவுக்கும், ஜப்பானுக்கும் தேயிலையின் உபயோகம் பரவியது. ஆனால் ஐரோப்பியர்களுக்கு 1610 வரை தேயிலையைப் பற்றி ஏதும் தெரியாது. 1657ல் இங்கிலாந்தில் ஒரு காப்பிக் கடைக்காரர் முதன் முதலில் தேயிலைப் பானத்தைப் பகிரங்கமாக விற்பனை செய்தார். பாலுடன் கலந்து குடித்தால் பல நோய்களைக் குணப்படுத்தக்கூடிய பானம் இது என்று விளம்பரப்படுத்தினார் அவர்.

தேயிலை பானம் அருந்துவது ஒரு பெரிய நாகரிகமாகக் கருதப்பட்டது பதினெட்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில். டீ குடிப்பவர்கள் கூடுவதற்கென்றே பிரத்தியேகமான உல்லாசத் தோட்டங்கள் அமைக்கப்பட்டன. நாட்டின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் இங்கு வந்து கூடி, கோப்பை கோப்பையாக டீ குடித்துக் கொண்டே பேசிப் பொழுதைப் போக்கினர். தேயிலை மீது ஏராளமான வரி விதிக்கப்படவே, தேயிலை பணக்காரர்களின் பானமாகியது.

தேயிலை இறக்குமதியின் மீது அரசாங்கம் ஏராளமான வரி விதிக்கவே டீயைக் கள்ளக் கடத்தல் மூலம் இங்கிலாந்துக்குள் கொண்டு வரலானார்கள். ஏதாவது ஒரு தனிமையான கடற்கரைப் பகுதியில் 'டீ'ப் பெட்டிகளை இறக்கிவிட்டு, இரவு வேளைகளில் அதை நகரத்துக்குள் கொண்டு வந்து ரகசியமாக விற்கலானார்கள்.

'1773ல் பாஸ்டன் டீப் பார்ட்டி' என்ற புகழ்பெற்ற சம்பவம் நடந்ததே இதனால் தான். டீக்கு வரி விதிப்பதை எதிர்த்து அமெரிக்காவில் குடியேறியிருந்தவர்கள் கப்பலில் வந்திருந்த டீப் பெட்டிகளைக் கடலில் தூக்கி வீசினார்கள்.

ஆதியில் சீனாவிலிருந்து தான் மேலைநாடுகளுக்கு 'டீ' விநியோகம் நடந்தது. அது கப்பலில் வரவேண்டியிருந்ததால் சரக்குகள் தாமதமாக வரலாயின. இதற்காக வியாபாரிகள் வேகமாக முதலில் வரும் 'டீ' கப்பல்களுக்குப் பரிசு தரலானார்கள். 1866ல் இதற்காகக் கப்பல் பந்தயமே நடந்தது என்றால் வேடிக்கையாக இருக்கிறதில்லையா?






இன்று உலகத்துக்கு நல்ல தேயிலை சப்ளை செய்வது பாரதம்தான். இலங்கையிலிருந்தும் தேயிலை உலக நாடுகளுக்குப் போகிறது. என்றும் பசுமையாக விளங்கும் ஏராளமான நிலப் பரப்பில் தேயிலை பயிரிடப்படுகிறது. மிக உயரம் வளர விடாமல் இச்செடிகளை வெட்டி விடுவர். நுனியில் உள்ள இரு இலைகளையும் அவற்றின் மேல் உள்ள இலை மொக்குகளையுமே தேயிலை தயாரிக்கப் பறிப்பார்கள். இக்காரியத்துக்கு அநேகமாகப் பெண்களையே அமர்த்துகிறார்கள். தளிர் மொக்குகளைப் பறித்துத் தோள் வழியே பின்னாலுள்ள கூடைகளில் சேகரிப்பார்கள். ஒரு நாளைக்குத் திறமை மிகுந்த ஒருவர் அறுபது பவுண்டு வரை தேயிலை பறிக்கலாம்.

பறித்த தேயிலை பலவிதமான பக்குவங்களுக்கு உட்பட்டுக் கடைகளில் 'டீ'யாக விற்பனைக்கு வருகிறது. ஒரு ரகசியம் தெரியுமா உங்களுக்கு? நாம் குடிக்கும் எந்த மார்க் தேயிலையும் உயர்ந்த ரகமல்ல. முதல் தரமான 'ஃபஸ்ட் ரேட்' — தேயிலை அத்தனையும் அந்நியச் செலாவணியை அள்ளிக் கொண்டு வர அயல்நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது. நாம் குடிப்பதெல்லாம் மூன்றாவது அல்லது நான்காவது ரகமான தேயிலை தான். இதற்கே இப்படி நாக்கைச் சப்புக் கொட்டும் நாம் முதல்தரமான டீயைக் குடித்தால்.....? டீயைச் சுவைத்து அதன் தரம் நிர்ணயிக்க ஓர் 'எக்ஸ்பர்ட்' உண்டு. அவருக்கு 'டீ டேஸ்டர்' என்றே பெயர். தினம் தினம் பல நூறு கோப்பை 'டீ'யை ருசி பார்த்துத் தரம் பிரிக்கும் அவர் நாக்குக்கு ரொம்ப மதிப்பு. -வா. மா.


சிரிக்கச் சிரிக்க..
சாமா
தாயார்: எங்கேடா சுத்திட்டு வரே!
கிட்டு: என் 'கோல்டு ஃபிஷ்'ஐ 'வாக்கிங்' அழைச்சுண்டு போயிட்டு வரேன்.
"ஒண்ணுக்கும் கீழே என்னடா?"
"சைபர் சார்!"
"சரி, சைபருக்கும் கீழே?"
"ஒண்ணுமில்லே சார்!"
"சபாஷ்! எப்படி ஒண்ணுமில்லேன்னு தீர்மானமாகச் சொன்னே?"
"இருந்தால் அதை நீங்க எனக்கு மார்க்காகப் போட்டிருப்பீங்களே!"
ஆட்டு இடையன்: பையா, இந்த ஆடுகள் சுபாவம் தெரியுமோ உனக்கு? ஒரு ஆடு முன்னாலே போனால் எல்லா ஆடுகளும் அதன் பின்னாலேயே போகும்!
பையன்: நீங்க மாத்திரம் என்ன? நீங்களும் அதன் பின்னாலேயேதான் போறீங்க!
அதையேதான் நானும் கேட்கிறேன்
உன்னைவிடச் சின்னவனை அடிக்கலாமா?
எங்களைப் புதுசாப் பள்ளிக்கூடத்திலே சேர்த்திருக்காங்க. பள்ளிக்கூடம் எந்தப்பக்கம் சார்?
இந்தப் பக்கம்...

சுண்டு, குண்டு, சீமாத் தாத்தா

சாமா—



சுண்டுவுக்குப் பரீட்சைகள் முடிந்த பிறகும் இரண்டு நாள் பள்ளிக்கூடம் நடந்து கொண்டிருந்தது. குண்டுவுக்கு லீவு விட்டாகிவிட்டது. குண்டு, ''நீ மாட்டிண்டே! எனக்கு லீவு. ஜாலியாக விளையாடுவேன்'' என்று கொம்மாளம் போட்டான். பள்ளிக்குக் கிளம்பிக் கொஞ்ச தூரம் சென்ற சுண்டு, ''ஓ!'' என்று கதறியபடி திரும்பி வந்தான். ''என்னடா?'' என்று சீமாத் தாத்தா ஓடி வந்தார். ''பல்வலி தாங்க முடியவில்லை'' என்றான் சுண்டு. ''அடடா! அதற்குள் கன்னமே வீங்கி விட்டிருக்கிறதே!'' என்றார் தாத்தா. ''ஐயோ! வலி, வாயைத் திறக்க முடியவில்லையே!'' என்றான் சுண்டு. சீமாத் தாத்தா ஓடோடியும் போய் ஒத்தடம் கொடுக்க ஆரம்பித்துவிட்டார். கையில் பிடிபடாமல் சுண்டு கத்தினான். தாயார் விசிறியை எடுத்து வந்து. ''குழந்தைக்கு வலி தாங்காமல் வியர்க்கிறது'' என்று விசி விசி விசிறினாள்.


''ஒத்தடத்துக்கும் வலி குறையாது போலிருக்கே! பல் சொத்தையாக இருக்கும், என் மாதிரி. சொத்தைப் பல்லைப் பல் வைத்தியரிடம் போய்ப் பிடுங்கி விடலாம்'' என்றார் சீமாத் தாத்தா. ''ஐயோ! வேண்டாம்... வலிக்கும்!'' என்று கத்தினான் சுண்டு. ''வலியாவது கிலியாவது. பொறுத்துக்கத்தான் வேணும். சொத்தைப் பல் என்றைக்கும் ஆபத்து!'' என்று கூறிச் சுண்டுவைக் குண்டுக்கட்டாகத் தூக்கிப் பல் டாக்டர் திருமேனியிடம் கொண்டு போனார், சீமாத் தாத்தா.


டாக்டர் வீட்டில் உள்ளே நுழைந்ததும் சுண்டு பயத்தினால் அழத் தொடங்கினான். நாற்காலியில் ஏற்றி உட்கார வைத்தவுடன் சுண்டுவின் ரகளை ஆரம்பித்தது. டாக்டர் கொரடாவை எடுத்தவுடன் சுண்டுவின் அலறலும் உச்ச நிலையை அடைந்தது. அவனை அடக்க முயன்ற சீமாத் தாத்தாவின் அலறலும் அதிகரித்தது. கடைசியில் பிடிபட்டான் சுண்டு. டாக்டர் அவனைப் பரிசோதித்தார். அவனுக்குப் பல்லில் கோளாறில்லை. அப்படியானால்? இரண்டு 'சூயிங்கம்'களை ஒட்ட வைத்துக் கன்னத்தை வீக்கமாகக் காட்டியிருந்தான் சுண்டு! ''எனக்குப் பள்ளிக்குப் போகப் பிடிக்கவில்லை. அதனால் லீவுக்காக இப்படிச் செய்தேன்!'' என்று அசடு வழியச் சுண்டு சொன்னபோது டாக்டருக்குக் கோபம் வந்தது. சீமாத் தாத்தாவைப் பார்த்துச் சத்தம் போட்டார். ''என் 'பீஸ்' இருபத்தைந்து ரூபாயை உடனே கீழே வைத்துவிட்டுப் போங்க'' என்றார் டாக்டர். தண்டமாக இருபத்தைந்து ரூபாயைக் கொடுக்க மனமில்லை தாத்தாவுக்கு. ரொம்ப நாளாகச் சிரமம் கொடுத்து வந்த தம் கடவாய்ப் பல்லைப் பிடுங்கும்படி டாக்டரிடம் சொன்னார். சீமாத் தாத்தாவின் பல் பிடுங்கப்பட்டது. கன்னத்தை அழுத்திக் கொண்டே தாத்தா வெளியேற அவருடன் குண்டுவும் சுண்டுவும் வெளியே வந்தார்கள். டாக்டர் 'நெக்ஸ்ட்' என்று விசிட்டிங் ரூமில் எட்டிப் பார்த்தார். அங்கு ஒருவரும் இல்லை. ''டாக்டர் சார்! உள்ளே இந்தப் பயல் போட்ட சத்தத்திலே, 'பல் பிடுங்கினால் இவ்வளவு வலிக்குமா?' என்று மற்ற பையன்களிரண்டு போய் ஓடிவிட்டார்கள்!'' என்று அங்குள்ள சிப்பந்தி சொல்ல, டாக்டருக்கு வந்ததே கோபம்! சீமாத் தாத்தாவையும் சுண்டுவையும் பார்த்து, ''உங்களால் எனக்கு எத்தனை நஷ்டம் பார்த்தீர்களா?'' என்று கத்திச் சீறினார். சீமாத் தாத்தாவுக்கு வந்த கோபத்தில் சுண்டுவைக் குண்டுக் கட்டாகத் தூக்கிப் போய்ப் பள்ளிக்கூடத்தில் விட்டுவிட்டு வீடு திரும்பினார், வலிக்கும் தம் உபாதையையும் பொருட்படுத்தாமல்.








பலே பாலு!
கற்பனை : வாண்டு
சித்திரம் : செல்லம்
பிரமாதமான படம். குமார் தான் என்னமா நடிக்கிறான்! குதிரை சவாரி 'எக்ஸலண்ட்'.
குதிரையை எப்படிக் 'காலப்'பில் விரட்டறான்? என்னமா 'ஸ்டண்ட்'டெல்லாம் செய்யறான்?
குதிரை வீரன்
குதிரை சவாரி செய்யறது அப்படி யொண்ணும் பெரிய விஷயமில்லே, அதுவும் சினிமாவிலே!
டேய், பாலு! நீ படிப்பில் புலியாக இருக்கலாம். குதிரை சவாரியைப் பத்தி உனக்கென்னடா தெரியும்?
உன்னாலே ஒரு குதிரை மேலே ஏறக் கூட முடியாது.
ஏற மட்டுமில்லே, ஜோரா சவாரியே செய்வேனுக்கும். எங்க அப்பா ஊட்டியிலே இருந்த போது கத்துக்கிட்டேன். குதிரை கொண்டாங்க, 'ரைடு' பண்ணிக் காட்டறேன்.
ஓ! அப்படியா? நம்ம மஸ்தான் வீட்டுக்குப் போகலாம். அவன் கிட்டக் குதிரைங்க இருக்கு, வா.
மஸ்தான் வீட்டுக்குப் போனபோது.
அவன் குதிரைகளை எங்கோ ஓட்டிக்கிட்டுப் போறானே.
ஏதாவது சினிமா 'ஷூட்டிங்' இருக்கும் போலிருக்கு.
பரவாயில்லே பாலு! நீ இதோ இருக்கிற கழுதையிலே சவாரி செய்து காட்டு. அது போதும் எங்களுக்கு.
கழுதை மேலே ஏற மாட்டேன்னு நெனச்சீங்க இல்லே? ஐயா சொன்னது சொன்னதுதான். இதுவே குதிரையானா இத்தனை நேரம் பறந்திருப்பேன்.
பயலுக்குக் குதிரை சவாரி தெரியும்தான் போலிருக்கு!
இந்தக் கழுதையை வேகமாக ஓட வைக்க ஒரு 'டிரிக்' பண்ணறேன்.



இந்தக் 'காரட்' எப்படி வேலை செய்யப் போகுது பார்?
அந்தி சாயுற நேரம்... ஆவாரஞ் செடியோரம்... ஆ... ஆ... அந்தி சாயுற நேரம்...ம்...
டேய், இதென்னடா ஐடியா? சைக்கிள் பின்னாலே...
உனக்குத் தெரியாதா? கழுதைகளுக்குக் காரட்டுன்னா உயிர்.
யேய்... ஐயோ!... பசங்களா... போச்சு... இந்தக் கழுதை இப்படிக் கண் மண் தெரியாம ஓடுதே... அச்சோ... அம்மா..!
குதிரை யேற்றம் யானையேற்றமெல்லாம் பயின்ற இளவரசனே! உனக்குப் புகழ் மிக்க வருங்காலமிருக்கிறது. எங்கள் திரைவானிலே! ஹ...ஹ...ஹா! ஓடியா, ஓடியா... இந்த வாய்க்காலைத் தாண்டு. பார்க்கலாம்... ஹேய்...
ஐயோ...வ்...
ooo
நமக்குக் காரட்டும் வேண்டாம் கழுதையும் வேண்டாம்! இந்தத் தண்ணியிலே யார் கால் வைக்கிறது?
அடுத்த நாள்.
பாலு! உனக்கு உன் நண்பர்கள் ஏதோ பெரிய பார்சல் அனுப்பி இருக்கிறார்கள். அடேயப்பா! என்ன கனம்?
TO BALU FROM THE BOYS
நேற்று என்னிடம் அவர்கள் நடந்துகொண்டதுக்கு வெட்கப்பட்டு இதை அனுப்பியிருப்பார்கள்.
பாலுவுக்கு. நீ சவாரி செய்வதற்கேற்ற சாதுவான குதிரை இதுதான்! ஹ...ஹ...ஹா!

காக்கிச் சட்டையின் கதை



-மூர்த்தி

கைபர் கணவாய். இரு பக்கமும் நெடிதுயர்ந்த மலைச் சுவர். இன்றைய பாகிஸ்தான் ஆப்கானிஸ்தானத்தின் எல்லை. நீல வானம். கொளுத்தும் வெய்யில். ஆங்கிலேயர் ஆதிக்கம் செலுத்திய காலம் அப்போது. கணவாயைக் காவல் புரிய மலைப்பகுதியில் ஆங்காங்கே சில கோட்டைகள். 1848ம் ஆண்டு இந்தியாவிலிருந்த ஆங்கிலப் படைப் பிரிவில் ஸர் ஹென்றி லூம்ஸ்டன் என்று ஓர் அதிகாரி இருந்தார். அவர் இள வயதினர். மேலே குறிப்பிட்ட அபாயம் நிறைந்த, புழுதி வண்ணப் பாதை அவருக்கு ஒரு பிரச்னையாக இருந்தது. எப்படி? ஏன்?

எல்லையில் தொல்லை கொடுத்துத் திடீர்த் தாக்குதல் நடத்திய மலைவாசிகளை அடக்கி ஒடுக்க ஸர் ஹென்றி ஒரு படையுடன் இங்கிருந்து அனுப்பப்பட்டார். பஞ்சாப் பிராண்டியர் 'ஃபோர்ஸ் பிரிகேட்' என்று இந்தப் படைக்குப் பெயர். இந்தக் கடமையை ஹென்றி திறம்பட முடித்தாக வேண்டும். ஆனால் பாரதத்தின் பல போர்க்களங்களில் கண்ட அனுபவமும், அமெரிக்க விடுதலைப் போரில் பிரிட்டிஷ் போர்வீரர்கள் தோல்வி அடைந்ததின் காரணமும் ஸர் ஹென்றிக்கு ஒரு புதிய விழிப்பை ஏற்படுத்தியிருந்தன. அந்தக் காலத்தில் ஆங்கிலேயச் சிப்பாய்களின் உடை என்ன தெரியுமா? பாரம்பரியமாக அணிந்து வரும் ரத்தச் சிவப்பான ஆடை. எங்கிருந்து பார்த்தாலும் இந்தச் சிவப்பு ஆடை விரோதிகளின் கண்ணில் சட்டென்று படும். புழுதி படிந்த மலைப் பகுதிகளில் மறைந்து கொண்டு தாக்கும் மலை ஜாதியினருக்கு இந்தச் சிவப்பு பளிச்சென்று தெரியும். அவர்களிடமிருந்து தப்புவது மிக மிகக் கடினம். என்ன செய்யலாம்?

ஸர் ஹென்றி துணிகரமாக ஒரு காரியம் செய்தார். தம் வீரர்களின் சிவப்பு ஆடையை மாற்றினார். எந்த வர்ணத்துக்கு மாற்றினார்? அந்தப் பகுதி நிலத்தின் புழுதி வர்ணத்துக்கு. பெர்ரி என்ற ஒரு வகைச் சதைப் பற்றுள்ள பழத்தின் சாறு அல்லது சேறு இவைகளைக் கொண்டு போர் வீரர்கள் தங்களுடைய ஆடைகளுக்கு அந்தப் பிரதேசத்து வண்ணத்துக்கு ஏற்றபடி சாயமேற்றினார்கள். அந்த ரெஜிமெண்டில் ஒரு பிரத்தியேகமான சாயம் தோய்ப்பவன் இருந்தான். ஒவ்வொரு போர்வீரனும் தன் சம்பளத்திலிருந்து ஒரு தொகையை இப்படி உடைகளை வண்ணம் மாற்றிச் சாயம் தோய்த்துக் கொள்ளச் செலவிட்டனர். இந்த உடையைக் 'காக்கி' என்று அழைத்தார்கள். உருது மொழியில் 'காக்கி' என்றால் புழுதி என்று பொருள்.

ஸர் ஹென்றியின் இந்த உடை மாற்றம் பெரிய வெற்றியைக் கொடுத்தது. இந்திய விடுதலைப் போர் நடந்த (1857-58) காலத்தில் இந்த உடை மாற்றம் மற்ற ரெஜிமெண்டுகளுக்கும் பரவியது. 1878—80ல் நடந்த இரண்டாவது ஆப்கானியப் போரிலும் சிவப்பு உடை ஒழிந்து காக்கி உடை பவனி வந்தது. 1880ஆம் வருஷ வாக்கில் இந்தியாவிலிருந்த எல்லா ரெஜிமெண்ட்களிலும் காக்கி உடையே அங்கீகரிக்கப்பட்டது. விசேஷ சடங்குகளிலும் விழாக்களிலும் மட்டுமே ஸ்கார்லட் (சிவப்பு) உடை அணிந்தனர் ஆங்கிலேய வீரர்கள்.

பிரிட்டிஷாரின் 'ரெட் கோட்' 1899 — 1902ல் ஆப்பிரிக்காவில் நடந்த போயர் யுத்தத்தில் பலத்த இழப்புக்கு ஆளாகியது. சிவப்பு யூனிஃபாரம் வெள்ளைத் தொப்பி இவைகளோடு இருந்த பிரிட்டிஷாரைப் போயர்கள் கொள்ளையாகக் கொன்று குவித்தனர். ஆகவே இங்கும் காக்கி உடை மாற்றம் கைக்கொள்ளப்பட்டது.

1900ம் வருஷ வாக்கில் ஐரோப்பாவில் காக்கி தன் ஆதிக்கத்தைத் தொடங்கியது. முதல் மகாயுத்தத்தின் ஆரம்பத்தில் போர்க்களத்தில் எல்லாருமே காக்கி அணியலானார்கள்.

மெள்ள மெள்ள மற்ற நாடுகளிலும் சூழ்நிலைக்கு ஏற்றபடியான போர் உடை அணியும் பழக்கம் ஏற்பட்டது. உலகின் எந்த மூலையானாலும் சரி 'காக்கி' என்றால் யுத்தகளத்து ஆடை; அது பழுப்பாகவும் இருக்கலாம் அல்லது அழுக்குப் பச்சையாகவும் இருக்கலாம் என்பது நிரந்தரமாகியது.

'காக்கி' பிறந்தது பாரதத்தின் மண்ணில்தான்.

'கோகுலம்'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக, ஆர். அனந்தநாராயணனால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: சதாசிவம்

சரியான வேளையில் சரியான வேலை...



49F-203R-TAM

REGISTERED NO. M. 9040

"'ஜாக்கிரதையாகக் கையாளவும்' என்று எழுதட்டுமா?"


"அவசியமில்லை. ஸதர்ன் ரோட்வேஸில்தானே அனுப்பப் போகிறோம் ?"

பிரதி வருடமும் பல லட்சம் டன் எடையுள்ள பார்சல்களை ஸதர்ன் ரோட்வேஸ் சுமந்து சென்று சேர்க்கிறது. பார்சல்களை அது ஜாக்கிரதையாகக் கையாள்கிறது. ஒவ்வொருவரையும் தனி அக்கறையுடன் கவனித்து சேவை செய்கிறது. இதனாலெல்லாம்தான் அதனிடம் வாடிக்கையாளர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. பார்சல்களை ஏற்றுவது, எடுத்துச் செல்வது, இறக்குவது அனைத்தையும் விசேஷப் பயிற்சி பெற்ற ஊழியர்களே செய்கிறார்கள்.

ஆகவே உங்கள் பார்சல்களை ஸதர்ன் ரோட்வேஸ் நல்லபடியாகவும் பத்திரமாகவும் கொண்டுபோய்ச் சேர்ப்பதில் வியப்பில்லை.

வாடிக்கையாளர்களிடை வளர்ந்து வரும் நல்லெண்ணமும் நம்பிக்கையும்தான் தென்னகம்பூராவையும் தன் பார்சல் ஸர்வீஸினால் ஸதர்ன் ரோட்வேஸ் அரவணைக்கத் துணை புரிந்துள்ளது. தங்கள் பண்டங்களை அனுப்புவதற்கு மேன் மேலும் அதிக மக்கள் ஸதர்ன் ரோட்வேஸைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட்
டிவிஎஸ் தொகுப்பைச் சேர்ந்த நிறுவனங்களில் ஒன்று
மதுரை



FDSSR1714TMB